# பல்கலைக்கழக மாணவர் சாசனம்



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர் சாசனம்

நாட்டின் பல்கலைக்கழகக் கல்வியின் பயன்களை மூலதனமிடுவதற்கும் மற்றும் அறுவடை செய்வதற்கும், பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார் ஊழியர்கள், நிருவாக மற்றும் துணை ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு ஒரு வழிகாட்டியாகவும் பல்கலைக்கழக மாணவர் சாசனம் அமையும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல. 20
வாட் இடம்
கொழும்பு 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை © பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ.), இலங்கை
சகல உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ISBN :978-955-583-115-4

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


பக்க இல.

முன்னுரை 05

பகுதி I

பல்கலைக்கழக மாணவர் சாசனம் - அறிமுகம் 08

அரச பல்கலைக்கழகங்களை நெறிப்படுத்தும் மூலக் கொள்கைகள் 11

வெளிப்படைத்தன்மை 11

சமத்துவமும் பன்முகத்தன்மையும் 11

ஜனநாயக உரிமைகளையும் சமூக நியமங்களையும் பாதுகாப்பதற்கான உறுதிப்பாடு 12

தேசிய பல்கலைக்கழகங்களின் பணி 13

கற்றல் கற்பித்தலில் மதிப்புயர் மையங்கள் 13

ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் மதிப்புயர் மையங்கள் 15

பகுதி II

கல்விச் சூழலும் மாணவர் நலச் சேவைகளும் 18

விடுதிவசதிகள் 18

சுகாதார சேவை 18

காவலும் பாதுகாப்பும் 19

நூலக சேவை 19

தகவல் தொடர்பாடல் சேவைகள் 19

தொழில் வழிகாட்டல் சேவைகள் 19

ஆங்கில மொழி கற்பித்தல் திட்டம் 20

விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகள் 20

பல்பண்பாட்டு மையங்கள் 21

மாணவர் உதவிச் சேவைகளும் மாணவர் நல வலையமைப்பும் 2[illegible]

பகுதி III

தேசிய பல்கலைக்கழகங்களின் ஆளுகையும் முகாமையும் 24

வாபஸ்பெறுதல் தொடர்பான கொள்கை 25

வெளிப்பாட்டுச் சுதந்திரம் 26

மாணவர் பிரதிநிதித்துவம் 26





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்க இல. |
|---|---|
| மாணவர் சங்கங்களை அமைக்கும் உரிமை | 26 |
| தனிப்பட்ட நன்நடத்தை | 27 |
| ஒழுக்காற்றையும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல் | 27 |
| **பகுதி IV** | |
| **பல்கலைக்கழகங்களில் தடை செய்யப்பட்டுள்ள முறைகேடான, சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகள்** | 30 |
| இலக்கியத் திருட்டும் ஏமாற்றும் | 30 |
| முறைகேடான நடத்தை, முரண்பாடு, எதிர்ப்புகள் | 30 |
| அவமதிப்பும் அடங்காமையும் | 31 |
| பொருட்கள், சேவைகள், தகவல்களைத் தவறாகப் பயன்படுத்தல் | 32 |
| அனுமதியற்ற நிதி சேகரிப்பு | 33 |
| வெளியார் வருகை | 33 |
| பல்கலைக்கழகத்தினுள் மதுபானம், போதைப்பொருள் புகையிலை என்பவற்றை வைத்திருத்தலும் நுகர்தலும் | 33 |
| சூதாட்டம் | 34 |
| துன்புறுத்துதல் அல்லது வன்முறை | 34 |
| பகடிவதை | 35 |
| பாலியல் துன்புறுத்தல் அல்லது பாலியல் துர்நடத்தை | 36 |
| திருட்டு | 37 |
| சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் | 37 |
| அனுமதியற்று உட்பிரவேசித்தல் | 37 |
| நிருவாக அதிகாரிகளுடனும் விசாரணைக் குழுக்களுடனும் ஒத்துழைத்தல் | 38 |
| மேல்முறையீட்டுக்கான உரிமை | 38 |
| **தேசிய பல்கலைக்கழகங்கள் அதன் மாணவர்களுக்கு வழங்க வேண்டியவையாக எதிர்பார்க்கப்படுபவை எவை?** | 39 |
| **தேசிய பல்கலைக்கழகங்கள் மாணவர்களிடம் மீள எதிர்பார்ப்பவை எவை?** | 41 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின்மூலம் நிறுவப்பட்ட **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு(ப.மா.ஆ.)** அரசாங்கத்தின் சட்டவாக்கத் துறைக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான ஒரு இணைப்பு நிறுவனமாகும். அரச பல்கலைக்கழக முறைமையை ஒருங்கமைக்கும் உறுப்பாகச் செயற்படும் அதிகாரம் அதற்கு உண்டு.

அதற்கு வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றும் வகையில் ப.மா.ஆ. **பல்கலைக்கழக மாணவர் சாசனத்தைத்** தயாரித்துள்ளது. அரச பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறும் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும், பல்கலைக்கழகத்துக்கும் அதன் மாணவர்களுக்கும் இடையில் உள்ள ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைக் கூறும் ஒரு ஆவணமாகவும் இது பயன்படும். அதேவேளை, அரச பல்கலைக்கழகங்கள் செம்மையாகச் செயற்படுவதற்காக அதன் பங்காளிகள் அனைவரிடமும் எதிர்பார்க்கப்படும் அர்ப்பணிப்பை அது வலியுறுத்துகின்றது என்ற வகையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள், நிருவாக மற்றும் துணை ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கும் இது ஒரு வழிகாட்டியாக அமையும்.

பல்கலைக்கழக மாணவர் சாசனம்:

- தேசிய பல்கலைக் கழகங்களின் பார்வையையும் பணியையும் பற்றியும், பல்கலைக் கழகங்களை ஆட்சிப்படுத்தும் மூலநெறிகளைப் பற்றியும், ஒரு மாணவராக உள்வாங்கப்பட்டபின் ஒருவர் அப்பல்கலைக் கழகத்திலிருந்து எதிர்பார்க்கக்கூடிய அனுபவங்கள் எத்தகையவை என்பது பற்றியும் ஒரு புறவரைவைத் தருகிறது.
- பல்கலைக் கழகத்துக்கும் அதன் மாணவர்களுக்கும் இடையே இருக்க வேண்டிய பங்காளித் தன்மையின் நிபந்தனைகளைக் கூறுகின்றது.
- தாங்கள் தேர்ந்தெடுத்த ஒரு துறையில் மாணவர்களின் அறிவுத் தேட்டத்துக்கு வழிகாட்டுவதோடு, ஒரு பல்கலைக்கழகத்துக்குத் தாங்கள் அனுமதிக்கப் பட்டதன்மூலம் தங்களுக்குக் கிடைத்துள்ள பெறுமதி மிக்க வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு மாணவர்களைத் தூண்டுகின்றது.
- மாணவர்கள் பயனுள்ள வகையிலும், ஆக்கபூர்வமாகவும், பொறுப்புணர்வோடும், மதிநுட்பத்துடனும் நடந்துகொள்வதற்கும் பல்கலைக் கழகத்தின் நற்பெயருக்கும் தங்கள் எதிர்காலத்துக்கும் பங்கம் விளைவிக்கும் எதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாமலிருப்பதற்கும் அவர்களுக்கு ஆலோசனை வழங்குகிறது.

- சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவதற்கும் பல்கலைக்கழக ஒழுக்காற்றினை ஊறுபடுத்துவதற்கும் காரணமாக இருத்தல், தூண்டுதல் அல்லது உதவுதல் என்பவற்றினால் ஏற்படும் விளைவுகள் பற்றி எடுத்துக் கூறுகின்றது.

- பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடைமுறைகள் பற்றியும் பொலிஸும் நீதிமன்றமும் விதிக்கும் தண்டனை பற்றியும் விளக்குகின்றது.

- பல்கலைக் கழகத்துள் தடைசெய்யப்பட்டுள்ள ஒழுக்கமற்ற, சட்டவிரோதமான நடவடிக்கைகளை அது தெளிவுபடுத்தகின்றது.

- பட்டியல்படுத்தப்பட்ட ஒழுக்கவிரோத, சட்டவிரோத நடவடிக்கைகளுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ செய்வோருக்கு அல்லது அவற்றில் ஈடுபடுவோர் மீது பல்கலைக் கழகங்கள் விதிக்கக்கூடிய தண்டனைகள் பற்றியும் விபரிக்கின்றது.

அவ்வகையில் அரச பல்கலைக் கழகங்கள் தமக்கு வழங்கப்பட்ட பணியைச் செவ்வனவே நிறைவேற்றுவதற்கும் நிறுவனத்தின் மைய விழுமியங்களையும் மூலக் கொள்கைகளையும் பேணிப்பாதுகாப்பதற்கும் ஒத்துழைக்குமாறு **பல்கலைக்கழக மாணவர் சாசனம்** மாணவர்களை மெய்யார்வத்துடன் வேண்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி I

### பல்கலைக்கழக மாணவர் சாசனம் - அறிமுகம்

**அரச பல்கலைக்கழகங்களை நெறிப்படுத்தும் மூலக் கொள்கைகள்**

வெளிப்படைத்தன்மை

சமத்துவமும் பன்முகத்தன்மையும்

ஜனநாயக உரிமைகளையும் சமூக நியமங்களையும் பாதுகாப்பதற்கான உறுதிப்பாடு

**தேசிய பல்கலைக்கழகங்களின் பணி**

கற்றல் கற்பித்தலில் மதிப்புயர் மையங்கள்

ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் மதிப்புயர் மையங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரச பல்கலைக்கழகங்கள்** நாட்டில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் மனித வளத் தேவையை நிறைவேற்றுவதற்காக அறிவும் ஞானமும் உள்ள இளம் ஆண்களையும் பெண்களையும் உருவாக்குவது, அதேவேளை உயர் கல்வியை நாடும் எல்லோரதும் அபிலாசைகளை நிறைவேற்றுவது ஆகிய இரட்டைப் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளன. மாணவர்கள் தேர்வுசெய்யும் துறைகளில் உயர் தரமும், பொருத்தப்பாடும், நன்கு அங்கீகரிக்கப்பட்டதுமான புலமைத்துவ மற்றும் வாண்மைத்துவத் தகைமைகளை வடிவமைத்து வழங்குவதன் மூலம் அவை இந்த உன்னதமான பணியை ஆற்றுகின்றன. இத்தகைமைகளுடன் பரிமாற்றம் செய்யக் கூடியதும் தொழில் நுட்பம் சார்ந்ததுமான திறன்களின் ஒரு தொகுதியையும் வழங்குகின்றன. இவற்றின் உதவியுடன் மாணவர்கள் எல்லையற்ற உலகின் சாத்தியப்பாடுகளை அறியும் ஆற்றல் பெறுகின்றனர். இளம் பட்டதாரிகள் தங்கள் முழுத் திறமைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய முடிவற்ற வாய்ப்புகளை இது வழங்குகின்றது.

**பல்கலைக்கழக மாணவர் சாசனம்**

பல்கலைக்கழக மாணவர் சாசனம் தேசிய பல்கலைக்கழகங்களின் பார்வையையும் பணியையும், பல்கலைக்கழகங்களை ஆட்சிப்படுத்தும் மூலக் கொள்கைகளையும் எடுத்துக் கூறுவதோடு, மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பின்னர் எதிர்பார்க்கக்கூடிய அனுபவங்களையும் தெளிவுபடுத்துகின்றது. பல்கலைக்கழகத்துக்கும் அதன் மாணவர்களுக்கும் இடையே இருக்கும் பங்காளி நிபந்தனைகளையும் அது எடுத்துக் கூறுகின்றது. அவ்வகையில் பல்கலைக்கழகத்துக்கும் அதன் மாணவர்களுக்கும் இடையேயான ஒரு ஒப்பந்தமாகவும் அது செயற்படுகின்றது. தேசிய பல்கலைக்கழகங்கள் செம்மையாகச் செயற்படுவதற்காக எல்லாப் பங்காளிகளிடமும் இருந்து எதிர்பார்க்கப்படும் அர்ப்பணிப்பை மாணவர் சாசனம் மீள்வலியுறுத்துவதனால் கல்விசார், நிருவாக மற்றும் துணை ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு ஒரு வழிகாட்டியாகவும் அது செயற்படுகின்றது.

தேசிய பல்கலைக்கழக முறைமை நிறுவப்படுவதற்கும் நிருவகிக்கப்படுவதற்கும் அடிப்படையான சட்ட விதிமுறைகள் தொடர்பாகவும் உயர் கல்வி அமைச்சர், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு, பல்கலைக் கழகக் கவுன்சில், மூதவை, பீட சபை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளஆணைகளும் அதிகாரங்களும் தொடர்பாகவும், பல்கலைக் கழகங்கள் தங்கள் செயற்பாடுகளை எவ்வாறு நிறைவேற்றுகின்றன (1978ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டம்), அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட உரிமங்கள் (WWW.ugc.ac.lk) எவை என்பன தொடர்பாகவும் தகவல்களைப் பெற விரும்பும் அனைத்துப் பங்காளிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்கலைக்கழக மாணவர் சாசனம்** வழிகாட்டுகின்றது. சகல தேசிய பல்கலைக் கழகங்களுக்கும் மிகுந்த தகவல் வழங்கும் இணைய தளங்கள் உள்ளன (விபரம் பின்னிணைப்பில்). பின்வரும் விடயங்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு இவ்விணைய தளங்களை மாணவர்கள் பயன்படுத்தலாம்.

- கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள்
- விதிமுறைகளும் செயற்படு முறைகளும் *(பல்கலைக்கழகக் கலண்டரைப் பார்க்கவும்).*
- பல்கலைக் கழகத்தின் கட்டமைப்பு, பீடங்கள், சேவை மையங்கள், அலகுகள் *(பல்கலைக் கழகக் கையேடு, பீட விபரக்கோவை ஆகியவற்றைப் பார்க்கவும்).*
- பீடங்களால் வழங்கப்படும் பட்டங்களும் பாடநெறிகளும் *(பீடங்களின் பட்ட, பட்டப் பின் கற்கை விபரக்கோவை அல்லது பாடநெறிப் பட்டியலைப் பார்க்கவும்).*
- மாணவர்களின் நடத்தை, ஒழுகலாறு தொடர்பான துணைச் சட்டவிதிகள் *(நடத்தை விதிகள், மாணவர் ஒழுகலாறு என்பவற்றைப் பார்க்கவும்).*

### அரச பல்கலைக் கழகங்களின் நோக்கும் பணிகளும்

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும், ஆராய்ச்சி. அறிவுப்பரப்பல் ஆகியவற்றைக் கையேற்பதிலும், ஆராய்ச்சி,புலமை,நல்லாட்சி, நிருவாகம் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும், சிறப்புயர் மையங்களாக விளங்குவதே அனைத்து அரச பல்கலைக் கழகங்களினதும் நோக்காகும்.

இந்நோக்கை முன்னெடுக்கும் முகமாக எல்லா அரச பல்கலைக் கழகங்களும் பல்வேறு கற்கைத் துறைகளிலும் தொழில் வாண்மைகளிலும் அறிவும் ஞானமும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதில் அக்கறையுடன் ஈடுபட்டுள்ளன. இவர்களின் உன்னத பணி பற்றி சகல அரச பல்கலைக் கழகங்களின் முன்னோடியான இலங்கைப் பல்கலைக் கழகத்தின் நிறுவனத் தந்தையான சேர் ஐவர் ஜென்னிங்ஸ் ஒருமுறை பின்வருமாறு கூறினார்.

> ***"இவ்வுலகில் தங்கள்மீது சுமத்தப்படக்கூடிய எந்தப் பணியையும் நிறைவுசெய்யக்கூடிய ஆற்றல் உடையவர்களாகவும், உயர் நுண்மதியுடைய குடிமக்களாகவும், பூரணமான தார்மீக நேர்மையாளர்களாகவும், சக்தி, முன்முயற்சி, நியாயத் தீர்ப்பு, சாதுரியம், தலைமை தாங்கும் பண்பு ஆகியவற்றைக் கொண்டவர்களாகவும் இளைஞர்களையும் யுவதிகளையும் பயிற்றுதல்".***
>
> ***சேர் ஐவர் ஜெனிங்ஸ்***
> ***இலங்கை பல்கலைக்கழக கலண்டர் 1947***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களின் இப்பணி, ஒரு சாதகமான கற்கைச் சூழலில் பயிலக்கூடிய வகையில், பிரதானமான கற்கைத் துறைகளில் கல்வித் திட்டங்களை உருவாக்கி வழங்குவதன் மூலமும், முக்கியமான சகல அடிப்படைக் கற்கைத் துறைகளிலும், மொழிகள், தகவல், தொடர்பாடல் தொழில் நுட்பம், வாழ்க்கைப் பணி அபிவிருத்தி, கலை, பண்பாடு முதலிய அடிப்படையற்ற கற்கைத் துறைகளிலும் பாடத்திட்டங்களை வகுத்து வழங்குவதன் மூலமும், மாற்றக்கூடிய அல்லது 'மென்மையான' ஒரு தொகுதி திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமும் சாத்தியமாக்கப்படுகின்றது. இது பல்கலைக்கழக மாணவர்களை முழு நிறைவான தனிநபர்களாக மாற்றுவதோடு 'தொழில் உலகில்' தங்கள் முழுத் திறன்களையும் வெளிக்காட்டக் கூடியவர்களாகவும் அவர்களை உருவாக்குகின்றது. இதற்கு மேலாக, அரச பல்கலைக் கழகங்கள் அறிவைத் தேடும் சகல வயதினருக்கும் பணியாற்ற உறுதி பூண்டுள்ளதோடு, உயர் கல்வியை நாடும் அனைவருக்கும் உயர்தரமான கற்றல் மற்றும் பயிற்சி வாய்ப்புகளையும் வழங்குகின்றன. ஆராய்ச்சி, அறிவுப் புலமை, சமூக இனத்துவ நல்லிணக்கம், நல்லாட்சி, நல்ல நிருவாகம் ஆகியவற்றை ஊக்கப்படுத்துவதோடு வெளிக்களச் செயற்பாடுகள் மூலம் பொது மக்களோடும் பல்கலைக்கழகங்கள் தொடர்புகொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய கொள்கை முனமுயற்சிகள், வழிகாட்டுதல்களோடு எல்லா அரச பல்கலைக்கழகங்களும் குடியியல் நியமங்களுக்கும் உரிமைகளுக்கும் இணங்க தனி நபர்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதோடு,வெளிப்படைத் தன்மை, சமத்துவம், பன்முகப்பாடு ஆகிய மூலக் கொள்கைகளினால் வழிகாட்டவும் நிருவகிக்கவும் படுகின்றன. கற்றல் கற்பித்தல், அழகியல், பண்பாட்டுச் செயற்பாடுகள், ஆராய்ச்சி, அபிவிருத்தி என்பனவற்றுக்கும் வெளிவாரிச் செயற்பாடுகளுக்குமான உயர் மையங்களாக அமைய அவை பெரிதும் முயல்கின்றன.

**வெளிப்படைத் தன்மை, சமத்துவம், பன்முகப்பாடு ஆகிய மூலக் கொள்கைகளும் ஜனநாயக உரிமைகளையும் சமூக நியமங்களையும் பாதுகாப்பதற்கான உறுதிப்பாடும்:**

அரச பல்கலைக்கழகங்கள், முதிர்ச்சிபெற்ற பல்வேறு வகைப்பட்ட மாணவர் குழுக்கள் ஆர்வத்துடனும் பரவசத்துடனும் நல்லிணக்கத்துடனும் உயர்கல்வியிலும் படைப்பாக்கத் துறையிலும் ஈடுபடுவதற்கு உகந்த இடங்களாகும். மேலும், பல்கலைக்கழகங்கள் தம்மத்தியில் வாழும் அனைவரும் சிவில் சமூகத்தின் நியமங்களை நன்கு அறிந்தவர்களாகவும் அவற்றை மகிழ்ந்து ஏற்பவர்களாகவும் இருப்பதை உறுதிப் படுத்துகின்றன. அதற்குப் பதிலாக, தம்மத்தியில் வாழும் அனைவரும் ஒரு சிவில் சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் எல்லாவகையான சமூக நியமங்களுக்கும் இணக்கமான, சமூகப் பிரக்ஞையுடைய, பொறுப்புணர்ச்சி மிக்க குடிமக்களாகச் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றன.

**வெளிப்படைத்தன்மை:** எல்லா அரச பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக அனுமதி, கற்கை நெறிகள், மதிப்பீட்டு நடைமுறைகள், நியமன தகைமைகள், நியமன முறைமைகள் தொடர்பான சகல தகவல்களையும் அதுபோல், பெறுதகுதிகள், சிறப்புரிமைகள், வாய்ப்புகள், பாதிப்புக்கான பரிகாரங்கள், ஒழுக்காற்று நடைமுறைகள் பற்றிய தகவல்களையும் வழங்குவதற்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளன.


**சமத்துவமும் பன்முகத்தன்மையும்:** இனத்துவம், மத நம்பிக்கை, பிறப்புமூலம், சமூக – பொருளாதாரப் பின்னணி ஆகிய அடிப்படைகளில் இலங்கைச் சமூகம் பன்முகப்பட்டது என்ற உண்மையை அரச பல்கலைக்கழகங்கள் நன்கு உணர்ந்துள்ளன. மாணவர்கள் அல்லது பல்கலைக் கழக ஊழியர்கள் யாரும் வயது, மரபினம் அல்லது இனத்துவம், மதம் அல்லது நம்பிக்கை, பால், உடற்குறைபாடு, திருமணம் மற்றும் பெற்றோர் அந்தஸ்த்து அல்லது பாலியல் சார்பு என்ற அடிப்படையில் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகமற்ற நிலைக்கு ஆளாக மாட்டார்கள் என்பதை அனைத்து தேசிய பல்கலைக் கழகங்களும் உறுதிப்படுத்துகின்றன.

**ஜனநாயக உரிமைகளையும் சமூக நிமங்களையும் பாதுகாப்பதற்கான உறுதிப்பாடு:** ஜனநாயக மூலக் கொள்கைகளையும் நியமங்களையும் பேணவும், தனிநபர் உரிமைகளை உத்தரவாதப்படுத்தவும் (கருத்து வெளிப்பாட்டு உரிமை, சங்கங்களையும் ஆர்வக் குழுக்களையும் அமைத்தல், துன்புறுத்தல், துஸ்பிரயோகம் செய்தல், அச்சுறுத்துதல் என்பன அற்று சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ்தல், அந்தரங்கம் பேணல், முதலியன), நிறுவனத்துக்குள் நீதியும் நேர்மையும் கொண்ட சமூகத்தைப் பேணவும் (போதைவஸ்த்து, மதுபானம் போன்ற தீங்குகள் இன்மை, எழுதப்பட்ட எழுதப்படாத சட்டங்களையும் சிவில் சமூக நியமங்களையும் மதித்தல்) தேவையான வழிவகைகளை வழங்க அனைத்து அரச பல்கலைக்கழகங்களும் உறுதிகொண்டுள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல தேசிய பல்கலைக்கழகங்களும் கற்றல் கற்பித்தலிலும், ஆராய்ச்சி, புத்தாக்கம் என்பவற்றிலும் மதிப்புயர் மையங்களாக உருவாவதற்கே முயல்கின்றன.

## கற்றல் கற்பித்தலில் மதிப்புயர் மையங்கள்

அரச பல்கலைக்கழகங்கள் அறிவைத் தேடும் சகல வயதுக் குழுவினருக்கும், படைப்பாற்றல் உடையோருக்கும், தாராள சிந்தனையாளருக்கும், அபிப்பிராயம் உருவாக்குவோருக்கும், பண்பாட்டு, இலக்கிய ஆய்வறிவாளருக்குமான மதிப்புயர் மையங்களாக அமைய முயல்கின்றன. அத்தோடு ஆக்கக் கலைவடிவங்கள், கட்புல மற்றும் அவைக்காற்று கலைவடிவங்கள் அனைத்துக்குமான புகலிடங்களாகவும் அமைய முயல்கின்றன. சகல தேசிய பல்கலைக் கழகங்களும் தமது வளங்களின் மிகப் பெரும் பங்கினை பாடவிதானங்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், முறையியல்கள், கருவிகள் முதலியவற்றை வடிவமைத்தல், மேம்படுத்துதல் அத்தோடு பல்வேறுபட்ட பாடநெறிகளையும் மொடியூல்களையும் வழங்குதல் ஆகிய பணிகளுக்குச் செலவிடுகின்றன. இவ்வகையில் ஒன்றிணைந்த கற்பித்தலையும் பயிற்சியினையும் மேம்படுத்துகின்றன.


சகல கற்கைத் திட்டங்களினதும் தரம், பொருத்தப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான தேடலின் ஒரு பகுதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுசரணையின்கீழ் இயங்கும் தேசிய தர உறுதிப்படுத்தல் மற்றும் சான்றளித்தல் கவுன்சிலின் பரிசீலனைக்குத் தங்கள் கற்கைத் திட்டங்களையும் நிறுவனங்களையும் உட்படுத்துமாறு அரச பல்கலைக்கழகங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்படி எல்லாக் கற்கைநெறிகளும் பாடத் தர முன்மாதிரி, வெளிவாரி மதிப்பீடு, தேசிய தகுதிப்பாட்டுச் சட்டகத்துக்கு இணக்கமாயிருத்தல், செயல்முறை ஒழுக்க விதிகள் முதலிய தரம் தொடர்பான சகல முக்கிய அம்சங்களையும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

தொழிற் சந்தைப் போக்குகள், அவற்றின் தேவைகள், தேவைப்படும் அடிப்படையான, துணையான திறன்கள், வெளியேறும் பட்டதாரிகளின் தரம்பற்றிய வேலை வழங்குனரின் கருத்துக்கள் என்பன பற்றி சகல அரச பல்கலைக்கழகங்களும் கிரமமாக மதிப்பீடுசெய்கின்றன. இதற்கு மேலாக, சகல பீடங்களும் துறைகளும் உள்நாட்டிலும் உலகெங்கிலும் தாம் சம்பந்தப்பட்ட கல்வித் துறைகளில் ஏற்படும் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றங்களையும், படைப்புத் திறனும் ஆர்வமும் உடைய இளம் பட்டதாரிகளுக்காக உருவாகிவரும் தொழில் வாய்ப்புகளையும் சந்தைகளையும் பற்றி தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றன. ஆகையினால்,ஆசிரியர்களுக்கு மிக நவீனமான கற்பித்தல் முறைகளிலும் கருவிகள், நுட்பங்கள் ஆகியவை பற்றியும் கல்வியூட்டுவதற்காக ஆசிரிய அபிவிருத்தி மற்றும் அல்லது கல்வித் தொழில் நுட்ப நிலையங்களை சகல தேசிய பல்கலைக்கழகங்களும் கொண்டிருக்கின்றன. அத்தோடு மாணவர் மைய, மாணவர் பங்குபற்றலுடன் கூடிய ஒன்றிணைந்த கற்றல் கற்பித்தல் முறையை முன்னேற்றுவதற்காகத் தொடர்ந்தும் முயல்கின்றன. தமது பாடத் திட்டங்களைத் தெடர்ந்தும் மீள்பரிசீலனை செய்து இற்றைப்படுத்துவதற்காகவும், கற்கை நெறிகளைப் பன்முகப்படுத்துவ தற்காகவும், பட்டக்கல்வி பயில்வோரை வாழ்நாள் முழுவதும் பயில்வோராக மாற்ற முயற்சிப்பதற்காகவும் சகல கல்விப் பீடங்களும் பாடவிதான அபிவிருத்தி அலகுகளையும் கொண்டுள்ளன.




அரச பல்கலைக்கழகங்கள் உயர் கல்வி பெற விரும்புவோர் அனைவருக்கும் கல்விவாய்ப்புகளை வழங்குவதற்காக பல்வேறு கற்கைத் துறைகளில் முழுநேர, பகுதிநேர கற்கை நெறிகளை வழங்குகின்றன. பகுதிநேரக் கற்கை நெறிகள் தொலை, தொடர்கல்வி, திறந்த, தொலைக் கல்வி நிலையங்கள் அல்லது வெளி வாரிப் பரீட்சைப் பகுதிகள் மூலம் வழங்கப்படுகின்றன. அரச பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசிப்பதற்கான தகைமைகள், முழுநேர, பகுதிநேர கற்கை நெறிகளில் சேர்வதற்கான தகைமைகள், கற்கை நெறிகள், பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் முறை தொடர்பான முழுவிபரங்களும் பல்கலைக் கழக ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கைநூலில் தரப்பட்டுள்ளன (www.ugc.ac.lk). சகல மாணவர்களும் சமமாக மதிக்கப்படுவதோடு பொதுவான அளவுகோல், தரம் என்பவற்றுக்கு ஏற்ப மதிப்பிடப் படுகின்றனர் குறிப்பிட்ட பட்டக் கற்கை நெறிகள் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களை குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களின் இணையதளங்களில் பெற்றுக்கொள்ள முடியும். பெரும்பாலான கற்கை நெறிகள் விரிவுரைகள் -கலந்துரையாடல்கள், செயல்முறை வகுப்புகள், வெளிக்கள செயற்பாடுகள்,மருத்துவ மற்றும் தொழில்துறைப் பயிற்சித் திட்டங்கள் போன்ற மாணவர்கள் கட்டாயமாகத் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டிய விடயங்களைக் கொண்டுள்ளன. எல்லா மாணவர்களும் தங்கள் கற்கை நெறிகளில் மேல்நோக்கிச் செல்வதற்கு வேண்டிய குறைந்தபட்ச தரப்புள்ளிச் சராசரியைப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். குறைந்த பட்சத் தேவையைப் பூர்த்திசெய்யத் தவறிய மாணவர்களுக்கு மீண்டும் முயல்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும். குறைந்தபட்ச தரப்புள்ளிச் சராசரியைப் பெறத் தவறும் மாணவர்களின் மாணவ அங்கத்துவம் ரத்துச்செய்யப்படலாம்.

உயர் சந்தைத் தேவையுடைய, தேசிய நலனுக்கு உகந்த பல்வேறுபட்ட கற்கை நெறிகளில் பட்டப்படிப்பை வழங்குவதே தேசிய பல்கலைக் கழகங்களின் பிரதான குறிக்கோள் எனினும், மாணவர் தாம் தேர்ந்தெடுத்த பட்டப்படிப்பின் மையப் பாடங்களுக்குத் துணையாக மையமற்ற கட்டாய பாட நெறிகளும், விருப்பத்துக்குரிய பாட நெறிகளும் கூட வழங்கப்படுகின்றன. மையமற்ற இப் பாடநெறிகள் ஆங்கில மொழி அறிவும் திறனும், தகவல் தொழில்நுட்ப அறிவும் திறனும், படைப்பாக்கத் திறன், பரந்துபட்ட சமூகத் திறன்களை உள்ளடக்கிய பரிமாற்றத் திறன்கள் என்பவற்றை மேம்படுத்தி வலுப்படுத்துவதையும் பண்பாடு மற்றும் அழகியல் செயற்பாடுகளில் ஆழ்ந்த அக்கறையையும் ரசனையையும் வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டவை.


## ஆராய்ச்சியிலும் புத்தாக்கத்திலும் மதிப்புயர் மையம்

அரச பல்கலைக்கழகங்கள் புதிய அறிவின் மையங்களாகக் கருதப்படுகின்றன. புதிய செல்நெறிகள், புதிய அறிவு, புதிய கருத்துகள், புதிய மதிப்பீடுகள் ஆகியவற்றைத் தேடுவதில் ஈடுபடுமாறு பட்டக்கல்வி, பட்டப்பின்கல்வி மாணவர்களும், ஆசிரியர்களும் உறுதியாக ஊக்கப்படுத்தப்படுகின்றனர். பட்டக்கல்வி நிலையிலும் பட்டப்பின்கல்வி நிலையிலும் ஆராய்ச்சி ஊக்கப்படுத்தப்படுகின்றது. பெரும்பாலான பட்டக்கல்விக் கற்கை நெறிகள் ஆராய்ச்சியைத் தங்கள் பாடவிதானத்தின் ஒரு பகுதியாக அறிமுகபடுத்தி யுள்ளன.இக்கற்றல் அனுபவங்கள் ஆராய்ச்சி மனப்பாங்கு உடையவர்களுக்கு அகவெளிச்சத்தைத் தருகின்றன. பட்டப்பின்கல்வி நிலையில், குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M.Sc., M.Phil, Ph.D. பட்டப்படிப்புகளில் கற்பித்தல் பாடநெறிகளுடன் ஆராய்ச்சிக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. அரச பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் பெரும்பாலான ஆசிரியர்கள் உலகின் பெருமதிப்புக்குரிய பல்கலைக் கழகங்களில் தமது பட்டப்பின் பயிற்சியைப் பெற்றவர்கள். தமது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக தேசிய, சர்வதேசிய ஆராய்ச்சி நிதிக் கொடைகளைக் கவர்ந்திழுக்கும் ஆற்றலும் அவர்களிடம் உண்டு. பெரும்பாலான ஆசிரியர்கள் கல்விப்புல வாண்மைக் கழகங்களுடன் இணைந்து செயற்படுவதோடு பெருமைக்குரிய தேசிய, சர்வதேச ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகளும் வெளியிடுகின்றனர். அநேக ஆசிரியர்கள், குறிப்பாக சமூகவிஞ்ஞான, கலை, மனிதப்பண்பியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் இலத்திரனியல், அச்சு ஊடகங்களிலும் தொடர்ச்சியாகப் பங்களிப்புச் செய்கின்றனர். இதன்மூலம் சமகால சமூக, பொருளாதா,ர அரசியல் பிரச்சினைகள் தொடர்பான, இலக்கியம் பண்பாடு தொடர்பான தமது அறிவையும் கருத்துகளையும் பொதுமக்களுடன் பகிர்ந்துகொள்கின்றனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

## கல்விச் சூழலும் மாணவர் உதவிச் சேவைகளும்

விடுதிவசதிகள்

சுகாதார சேவை

காவலும் பாதுகாப்பும்

நூலக சேவை

தகவல் தொடர்பாடல் சேவைகள்

தொழில் வழிகாட்டல் சேவைகள்

ஆங்கில மொழி கற்பித்தல்

விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகள்

பல்பண்பாட்டு மையங்கள்

மாணவர் உதவிச் சேவைகளும் மாணவர் நல வலையமைப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல அரச பல்கலைக்கழகங்களும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் முழுமையான ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதை ஊக்கப்படுத்துவதற்குச் சாதகமான ஒரு கல்விச் சூழலை வழங்குகின்றன. எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஒரு தரமான வசதிகளையும் மாணவர் சேவைகளையும் பொது வசதிகளையும் வழங்குகின்றன. பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் இடம், அதன் முதிர்ச்சி ஆகியவற்றைப் பொறுத்து இவற்றின் கிடைப்பிலும் தரத்திலும் வேறுபாடுகள் இருக்கக்கூடும். எல்லா அரச பல்கலைக் கழகங்களும் ஆங்கில மொழித் திறன்கள், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத் திறன்கள், தொழில் முயற்சித் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள், நன்னடத்தை, ஆளுமைக் கவர்ச்சி முதலிய துணைநிலையான, பரிமாற்றக் கூடிய திறன்களை அடைவதற்கு மாணவர்களுக்கு உதவும் வகையில் துணைக்கற்றல் நிலையங்களையும், கற்கை நெறிகளையும் கொண்டுள்ளன. பெரும்பாலான தேசிய பல்கலைக்கழகங்கள் விசேட தேவைகள் அல்லது மறுவகையில் திறனுடைய மாணவர்களுக்காக விசேட ஆதரவு மற்றும் உதவிச் சேவைகளை விருத்திசெய்துள்ளன. அத்தகைய மாணவர்களுக்கான வசதிகளை மேலும் மேம்படுத்தும் முயற்சியில் சகல பல்கலைக்கழகங்களும் ஈடுபட்டுள்ளன.


**விடுதி வசதிகள்:** கொழும்புக்கு வெளியேயுள்ள ஏற்கனவே நிலைபெற்ற பல்கலைக்கழகங்களும் புதிதாக நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்களும் வதிவிட வசதிகளைக் கொண்டுள்ளன. கொழும்பை மையமாகக் கொண்ட பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழகங்களுக்கு வெளியே அதிக வதிவிட வசதிகள் இருப்பதனால், வரையறுக்கப்பட்ட வதிவிட வசதிகளைக் கொண்டுள்ளன. பல்கலைக்கழக விடுதியில் வதிவிட வசதிபெற்ற மாணவர் தாம் அங்கு தங்கும் காலத்தில் செலுத்தும் கட்டணம் மிகச் சொற்பமே. வதிவிட வசதிபெற்ற மாணவர் பல்கலைக்கழக விடுதி நிருவாகத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். விடுதி வசதிகள் கன்றீன் சேவைகளையும் சிலசமயங்களில் சமைத்து உண்ண விரும்பும் மாணவர்களுக்கான சமையல் வசதிகளையும் கொண்டுள்ளன.

**சுகாதார சேவை:** சகல அரச பல்கலைக்கழகங்களும் மாணர்களுக்கு வழக்கமான உடல் நல சேவைகளையும் அவசர சேவைகளையும் வழங்குவதற்கான உள்ளக சுகாதார சேவை நிலையங்களைக் கொண்டுள்ளன. ஒரு மாணவருக்கு விசேட அல்லது அவசர மருத்துவ உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உள்ளக சுகாதார சேவை நிலையம் அம்மாணவரை அண்மையிலுள்ள அரச மருத்துவமனைக்கு அனுப்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காவலும் பாதுகாப்பும்:** பல்கலைக்கழக பாதுகாப்புச் சேவை வலைப்பின்னல் ஊடாக மாணவர்களுக்கு ஒரு பாதுகாப்பான சூழல் உறுதிசெய்யப்படுகின்றது. மேலும் மாணவர்களின் நடத்தையும் ஒழுங்கும் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் நடைமுறையிலுள்ள பல்கலைக்கழக காவலர் (மார்சல்), ஒழுக்காற்று காவலர் (புறக்றர்) முறைமையின் ஊடாக கவனமாகக் கண்காணிக்கப்படுகின்றன.



**நூலக சேவை:** சகல தேசிய பல்கலைக்கழகங்களும் நிறைவான நூல் தொகுதிகளைக் கொண்ட மத்திய நூலகங்களையும், பல்வேறு பீடங்களுக்கும் உரிய கிளை நூலகங்களையும் கொண்டுள்ளன. இந்நூலகங்களில் அவ்வத் துறைகளுக்குரிய மிகச் சிறப்பான நூல் சேர்க்கைகள் உள்ளன. பெரும்பாலான நூலகங்களின் சேவைகள் கணினிமயப்படுத்தப் பட்டுள்ளன. இதனால் உசாத் துணை நூல்களைத் தேடுவது இலகுவாக்கப்பட்டுள்ளது. நூலக உதவியாளர்கள் மாணவர்களுக்கு உதவ எப்போதும் தயார் நிலையில் உள்ளனர்.

**தகவல் தொடர்பாடல் சேவைகள்:** சகல அரச பல்கலைக்கழகங்களும் தகவல், தொடர்பாடல் மத்திய நிலையங்களைக் கொண்டுள்ளன. இந்த மத்திய நிலையங்களுக்குத் துணையாக பெரும்பாலான பீடங்கள் தனியான கணினி அலகுகளைக் கொண்டுள்ளன. இந்த நிலையங்கள் எல்லாப் பீடங்கள், பிரிவுகள், மையங்கள், அலகுகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இணைய சேவைகளுடன் கூடிய உள்ளக வலைய இணைப்பை வழங்குகின்றன. அத்துடன், பீடங்களால் வழங்கப்படும் கற்கை நெறிகளுக்குத் துணையாக தகவல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களாகவும் தொழில்நுட்ப வள நிலையங்களாகவும் இவை செயற்படுகின்றன. பெரும்பாலான தகவல் தொழில்நுட்ப மையங்கள் உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பயிற்சி நெறிகளையும் வழங்குகின்றன. மேலும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இணையம் மூலம் கற்றல் வளங்களையும் சேவைகளையும் வழங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில் வழிகாட்டல் சேவைகள்:** எல்லா அரச பல்கலைக்கழகங்களும் தொழில் வழிகாட்டல் அலகுகளைக் கொண்டிருக்கின்றன. இவற்றில் பகுதிநேர அல்லது முழுநேர பணிப்பாளர்களும் ஆலோசகர்களும் பணிபுரிகின்றனர். இத்தொழில் வழிகாட்டல் அலகுகள் மாணவர்கள் தங்களைத் தாங்களே 'தொழில் உலகுக்கு'த் தயார்படுத்திக்கொள்ளும் வகையில் ஒரு பரந்துபட்ட கற்றல் திட்டங்களையும் வாய்ப்புகளையும் வழங்குகின்றன. இக்கல்வித் திட்டங்கள் இளம் வயதினர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு மாறுவதை இலகுபடுத்துவதையும், கல்வி மற்றும் தொழில்சார் ஆலோசனை சேவைகளை வழங்குவதையும், தொழில் வாய்ப்புக்கான திறன்களையும் தொழில் முயற்சிக்கான திறன்களையும் பெறுவதற்கான கற்றல் வாய்ப்புகளை வழங்குவதையும், ஆளுமை அபிவிருத்திக்கான திட்டங்களை வழங்குவதையும் நோக்கங்களாகக் கொண்டவை. அத்தோடு, தொழில்சார் தகவல்களைப் பெறுதல், மாணவர்கள் தொழில் அனுபவம் பெறக்கூடிய வகையில் பட்டதாரி மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி வாய்ப்புகளைத்தேடுதல், அதன்மூலம் தனியார் துறையிலும் அரச துறையிலும் தொழில் தேடும் அவர்களின் முயற்சியையும், சுய தொழில் முயற்சிகளைத் தொடங்குவதையும் இலகுவாக்குதல் என்பனவும் இதன் நோக்கங்களாகும்.

**ஆங்கில மொழி கற்பித்தல் திட்டம்:** தேசிய மொழிகளில் திறன் பெறுவதோடு ஆங்கிலத்திலும் வேறு பிற மொழிகளிலும் தேவையான அளவு தேர்ச்சிபெறுதல் போட்டிமிகுந்த இன்றைய உலகில் வெற்றிபெறுவதற்கு மிகவும் இன்றியமையாததாகும். சகல அரச பல்கலைக்கழகங்களும் ஆங்கில மொழி கற்பித்தல் அலகுகளையும் (ELTU) ஆங்கில மொழி கற்பித்தல் கற்கை நெறிகளையும், பாடவிதானம், பௌதீக மற்றும் மனித வளங்கள், ஆங்கில மொழி கற்பித்தல் அலகுகளின் கொள்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் வியாபித்து வலுப்படுத்தியுள்ளன. பெரும்பாலான கற்கைநெறிகள் ஆங்கில மொழி கற்பித்தலைப் பாடவிதானத்தில் உள்ளடக்கியுள்ளதோடு விதிக்கப்பட்ட பாடநெறிகளைப் பூரணப்படுத்துவதற்கு ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகவும் ஆக்கியுள்ளன. பட்டம் பெறுவதற்கு முன்னர் மாணவர்கள் திருப்தியான முறையில் தங்கள் ஆங்கிலத் தேர்ச்சியை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

**விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகள்:** சகல தேசிய பல்கலைக்கழகங்களும் சுய நிறைவான சமூக, தொழிற்பாட்டு நிறுவனங்களாகும். தமது மாணவர்களுக்கும் பணித்தொகுதியினருக்கும் அவசியத் தேவையான அனைத்துச் சேவைகளையும் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகின்றன. ஆரோக்கியமான மனங்களையும் சக்திவாய்ந்த உடல்களையும் மேம்படுத்தும் நோக்குடன், சகல பல்கலைக்கழகங்களும் அனைத்துச் சாதனங்களையும் கொண்ட விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகளை விருத்தி செய்து செயற்படுத்தி வருகின்றன. சில பல்கலைக்கழகங்கள் பூரண உபகரணங்களைக் கொண்ட உள்ளக விளையாட்டு உடற்பயிற்சிக் கூடங்களைக் கொண்டுள்ளன. சில பல்கலைக்கழகங்கள் விளையாட்டுத்துறை, விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய கற்கைத் துறைகளில் சான்றிதழ், டிப்ளோமா பாடநெறிகளுக்கான கற்பித்தலை ஆரம்பித்துள்ளன.விளையாட்டு, பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்கான வசதிகளை வழங்குவதோடு பல பல்கலைக்கழகங்கள் போட்டிக்குரிய அநேக விளையாட்டுகளில் வாண்மைசார்ந்த பயிற்சிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குகின்றன. அத்தோடு தேசிய, பல்கலைக் கழகங்களுக்கிடையிலான, கொமன்வெல்த் முதலிய விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதை ஊக்கப்படுத்துகின்றன.

**பல்பண்பாட்டு மையங்கள்:** இலங்கைச் சமூகத்தின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் சகல அரச பல்கலைக்கழகங்களும் சகல சமூக, பண்பாட்டு, இனத்துவ, சமயப் பின்னணி கொண்ட மாணவர்களையும் உள்ளடக்குகின்றன.பல்வேறுபட்ட சமூக, பண்பாட்டு, இனத்துவ, சமயப் பின்னணிகளில் இருந்து வரும் மாணவர்கள் மத்தியில் ஒற்றுமையும் நல்லுறவும் ஊக்கப்படுத்தப்படுகின்றன. பல்கலைக்கழகங்களில் இருக்கும் காலத்தில் பட்டதாரி மாணவர்களின் வாழ்க்கையை சௌகரியமாக்குவதோடு, அவர்கள் இங்கு பெறும் அனுபவம் அவர்களை சமூக மாற்ற முகவர்களாக ஆக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்மூலம் அவர்கள்முழுச் சமூகத்திலும் சமூக, இனத்துவ நல்லுறவை விதைத்து அதனை முன்னெடுத்துச் செல்லமுடியும். பல்கலைக்கழகங்கள் இக்குறிக்கோளை நிறைவேற்றும் முக்கிய நிலையங்களாகச் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன. இப்பின்னணியில்தான் அநேக தேசிய பல்கலைக்கழகங்கள் பல்பண்பாட்டு நிலையங்களை நிறுவும் முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ளன. இவை வேறுபட்ட இனத்துவ, சமூகக் குழுக்கள் மத்தியில் பாரிய சமூக, இனத்துவ ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தும் குறிக்கோளை முன்னெடுக்கும் வகையில் பல்வேறுபட்ட செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தும்.

**மாணவ நல சேவைகள்:** மாணவர்களின் அனுமதி, விடுதி வசதி, ஏனைய அத்தியாவசிய சேவைகள் தொடர்பான அனைத்து விடயங்களிலும் அவர்களுக்கு உதவுவதற்குத் தனியான நிருவாக மற்றும் சேவைப் பிரிவுகள் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. சில பல்கலைக்கழகங்கள் நன்கு நிறுவப்பட்ட மாணவ நல சேவையினையும் தகவல் வழங்கு முறைமையினையும் கொண்டுள்ளன. வழமையாக இவை மாணவர் நலசேவைப் பணிப்பாளர் அல்லது இணைப்பாளர் ஒருவரால் தலைமைதாங்கப்படுகின்றன.

எல்லா அரச பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகத்துள் மணவர் வாழ்வை சுய நிறைவாக்கும் நோக்கில், உணவகச் சேவைகள், மளிகைக் கடைகள், தபால் அலுவலகங்கள், இணைய சேவைகள், தையல் கடைகள், சிகை அலங்கார நிலையங்கள் முதலியவற்றை வழங்குவதற்குரிய ஒழுங்குகள் உள்ளன.

எல்லா அரச பல்கலைக்கழகங்களிலும் கலாசார நிலையங்கள், சூழலியல் ஆய்வுச் சங்கங்கள், நாடக சங்கங்கள், இசைச் சங்கங்கள் முதலிய பல்வேறுபட்ட அமைப்புகள் உள்ளன. இவை படைப்பாக்க மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த பல்வேறுபட்ட நடவடிக்கைகளுக்கு பரந்த வாய்ப்பினை வழங்குகின்றன. இத்தகைய கற்கை சாரா நடவடிக்கைகள், நிகழ்ச்சிகள் மூலம் மாணவர் மத்தியிலும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலும் நல்லுறவும், பல்வேறு இனத்துவ சமூகங்கள் மத்தியில் ஒருமைப்பாடும் நல்லிணக்கமும் மேம்படுத்தப்படுகின்றன. இவற்றுக்கு மேலாக, சகல அரச பல்கலைக்கழகங்களும் கல்வித்துறைத் தேடல்களுக்கு மிக அத்தியாவசியமான அழகியல்ரீதியில் வளமான ஒரு சூழலை உருவாக்குவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி III

## தேசிய பல்கலைக்கழகங்களின் ஆளுகையும் முகாமையும்

வாபஸ்பெறுதல் தொடர்பான கொள்கை

வெளிப்பாட்டுச் சுதந்திரம்

மாணவர் பிரதிநிதித்துவம்

தனிப்பட்ட நன்நடத்தை

ஒழுக்காற்றையும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்

வாபஸ்பெறுதல் தொடர்பான கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பல்கலைக்கழகங்கள் 1978ஆம் ஆண்டின் 16அம் இலக்கச் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக நிறுவப்பட்டு நிருவகிக்கப்படுகின்றன. சகல பல்கலைக்கழகங்களும் தமது அடிப்படையான செயற்பாடுகளை முகாமைசெய்யவும், தமது சேவைகளை திட்டமிட்டு வடிவமைத்து நிறைவேற்றுவதற்றுரிய இயல்வலுவைப் பெற்றுக்கொள்ளவும், மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் குறைகளைத் தீர்த்துவைக்கவும், ஒழுக்காற்றினைப் பேணவும் பூரணமான அதிகாரத்தையும் வலுவையும் பெற்றுள்ளன. எல்லாப் பல்கலைக்கழகங்களும் பெறுபேற்றை குவிமையப்படுத்திய அதிகார அமைப்பையும் முகாமைத்துவத்தையும் கொண்டுள்ளன. அவை தம் பங்காளிகளுக்கு பொறுப்புக்கூறவும் பதில் சொல்லவும் கடமைப்பட்டவை. இந்த நிறுவனங்கள் தமது நோக்கு, பணிகள் என்பவற்றால் வரையறுக்கப்பட்டவகையில் தமது மையச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகத் தமது வளங்களை (மனித, பௌதீகச் சொத்துகள், தொழில்நுட்பம், மூலதனம் போன்றவற்றை) உச்சமாகப் பயன்படுத்தும் திறன் உடையவை.

எல்லா வகையிலும் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கப்போகும் எதிர்காலத் தலைவர்களை பயிற்றுவிக்கும் மதிப்புயர் மையங்களாகத் தாம் செயற்படுவதை அரச பல்கலைக்கழகங்கள் பூரணமாக உணர்ந்திருக்கும் அதேவேளை,பிற அரச நிறுவனங்களுக்கு ஒரு முன்மாதிரியாகச் செயற்படும் ஒரு பிரதான பணியும் அவற்றுக்கு உண்டு. துரதிஸ்டவசமாக அரச பல்கலைக்கழகங்கள் பற்றிய படிமம் கடந்த மூன்று தசாப்தகாலத்துள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனங்களால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரம் அண்மைக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களால் தவறாகவும் மோசமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் ஒப்பீட்டளவில் பிற ஆசிய நாடுகளில் காணப்படுவதை விட இலங்கைப் பல்கலைக்கழக முறைமையின் முன்னேற்றம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அமைதிவிரும்பும் மாணவர்களை பலவந்தமாக நிர்ப்பந்தப்படுத்தி சிறுதொகை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகளே என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. துணைவேந்தர் உட்பட அதிகாரிகளைப் பணயக் கைதிகளாக வைத்திருத்தல், வசதிகளைத் தடைசெய்தல், சொத்துக்களைச் சேதப்படுத்துதல், கொலைகள் உட்பட உயிர்களுக்குச் சேதம் விளைவித்தல் போன்ற சம்பவங்கள் சில சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழகங்களில் நடைபெற்றுள்ளன.அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் இத்தகைய தரம்குறைந்த அழிவு நடவடிக்கைகளைக் கையாளும் சுமையை அடிக்கடி தூக்கவேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால், நிறுவனத் திட்டமிடல், நிறைவேற்றுதல், பணிகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளில் தம் கவனத்தையும் நேரத்தையும் செலவிடமுடியாமல் அவர்கள் தடுக்கப்பட்டனர்.அரசியல் நோக்கமுடைய வெளிச் சக்திகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டப்பட்ட ஒரு சிறுதொகை மாணவர்களின் இத்தகைய பொறுப்பற்ற நடத்தைகள் முழுப் பல்கலைக்கழக சமூகத்தையும் பொதுமக்கள் முன்னிலையில் மதிப்பிழக்கச் செய்தன. இதன் விளைவாக பல்கலைக்கழக சமூகம் மட்டுமன்றி மாணவர்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.தனியார் துறைப் பதவிகளுக்கு பல்கலைக்கழகப் பட்டதாரிகளைச் சேர்ப்பது தொடர்பான தொழில் வழங்குநரின் எதிர்வினைகளில் இது வெளிப்படையாகத் தெரிகின்றது.தனியார் துறைகளில் ஆரம்ப நிலைப் பதவிகளுக்கு பட்டதாரிகளை விட சிறப்புத் திறன்கள் அற்ற க. பொ. த. (உ/த) தகைமையுடைய மாணவர்களையே அவர்கள் விரும்புகின்றனர். இதன் காரணமாக அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் வேலையற்ற பட்டதாரிகளுக்கு குறைந்த சம்பளத்தில் மதிப்பற்ற தொழில்களை வழங்குவதற்காக அரச துறைகளில் இல்லாத பதவிகளையெல்லாம் உருவாக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின.

ஆகவே, பல்கலைக்கழகங்கள் இடையூறின்றி செயற்படுவதையும், தேசிய பல்கலைக்கழகங்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதையும் உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் தமது சிறுபராயத்திலிருந்து கனவுகண்ட தம் வாழ்வின் குறிக்கோள்களை அடைவற்காகச் செயலாற்றுவதற்கும், தம்மை நேசிக்கும் பெற்றோரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும் உதவும் வகையிலும் இதன்கீழ் விபரிக்கப்படும் விதிமுறைகளைப் பின்பற்றி ஒழுகுமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

**வாபஸ் பெறுதல் தொடர்பான கொள்கை:** யுஜிசி இன் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மாணவர்கள் தம்மை உள்ளக மாணவர்களாகப் பதிவுசெய்துகொள்கின்றனர்.எந்தப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தம்மைப் பதிவுசெய்துகொண்டார்களோ அதே பல்கலைக்கழகத்திலேயே அவர்கள் தம் கல்வியைத் தொடரவேண்டும். ஒரு பல்கலைக்கழகத்தில் தம்மை உள்ளக மாணவர்களாகப் பதிவுசெய்துகொண்டு அங்கு கல்வியைத் தொடரும் மாணவர்கள் பிறிதொரு பல்கலைக்கழகத்தில் பிறிதொரு பட்டக்கல்விக்கு தம்மைப் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து பிறிதொரு பல்கலைக்கழகத்துக்கு மாற்றம் கோரும் விண்ணப்பங்கள் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பதிவுசெய்த ஒரு கற்கைநெறியிலிருந்து வாபஸ் பெறுதல் விரும்பப்பட மாட்டாது. இது அரச வளங்களையும் தகுதியுடைய மாணவர்களுக்குக் கிடைக்கும் பெறுமதிமிக்க வாய்ப்புகளையும் விரயம் செய்வதாகவும் அமையும். அத்தோடு பல்கலைக்கழகத்துக்கு அனுமதிபெறும் தகுதியுடைய பிறிதொரு மாணவரின் வாய்ப்பைத் தடைசெய்வதாகவும் இது அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிப்பாட்டுச் சுதந்திரம்:** சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, கல்விதொடர்பான




விடயங்கள், நிருவாக மற்றும் மாணவ நலத்துறை தொடர்பான பிரச்சினைகள், அதுபோல் சமூக, அரசியல் பிரச்சினைகள் போன்றவை தொடர்பாகவும் தமது கருத்துக்களை உருவாக்கவும் அவற்றை வெளிப்படுத்தவும் மாணவர்கள் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். இருப்பினும், அத்தகைய வெளிப்பாடுகள் தனிமனிதமயப்பட்டனவாகவோ, தனிநபர்களை இலக்குவைப்பனவாகவோ இருக்கக்கூடாது. ஏனெனில்,ஒவ்வொருவருக்கும் மற்றவரைத் தாக்காது தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமை உண்டு.

**மாணவர் பிரதிநிதித்துவம்:** 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் தீர்மானம் எடுக்கும் சில நிலைகளில் மாணவ பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர் நலன் தொடர்பான விடயங்கள் பற்றியும், நிருவாகம், கல்வி தொடர்பான சில விடயங்கள் பற்றியும் மாணவ பிரதிநிதிகள் மூலம் மாணவர்கள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தலாம். பீட சபைகள், உணவு மற்றும் கன்றீன் குழுக்கள், பாதுகாப்புக் குழுக்கள், விடுதிக் குழுக்கள், விளையாட்டுக் குழுக்கள், பல்கலைக்கழகத்தால் ஒழுங்குசெய்யப்படும் நிகழ்வுகளுக்காக அவ்வப்போது நியமிக்கப்படும் குழுக்கள் முதலியவற்றின் அமர்வுகளில் மாணவ பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


**மாணவர் சங்கங்களை அமைக்கும் உரிமை** 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் நோக்கமற்ற பல்வேறு வகையான மாணவ சங்கங்களை, மன்றங்களை, குழுக்களை அமைக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், இத்தகைய சங்கங்கள் எதிலும் சேராமல் சுயாதீனமாக இயங்குவதற்கும் மாணவர்களுக்கு உரிமை உண்டு. ஒரு குழுவில் சேர்வதற்கும் சேராமல் இருப்பதற்குமான மாணவர்களின் தனிமனித சுதந்திரம் சங்கங்களையும் மன்றங்களையும் அமைக்க விரும்பும் மாணவர்களால் மதிக்கப்பட வேண்டும். சுயாதீனமாக இயங்க விரும்பும் மாணவர்களின் உரிமையைத் தடுக்க முயலும் மாணவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனிப்பட்ட நன்நடத்தை:** பல்கலைக்கழக சமூகத்தில் உள்ளடங்கும் ஒவ்வொரு தனிநபரும் தமது நிறுவனத்தின் பெருமையையும் அதன் உறுப்பினர்களின் சுயகௌரவத்தையும் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே, பல்கலைக்கழக உறுப்பினர் அனைவரும் அதனுடைய தேடலுக்கும் பணிக்கும் பொருத்தமான வகையில் நடந்துகொள்ள வேண்டும்.தனிநபர்கள் தம் சொந்த சுகாதாரம், நன்நடத்தை, உடை, பேச்சு முதலியவற்றில் கவனமாக இருத்தல் அவசியமாகும். தமது சக மாணவர்களின் அல்லது பல்கலைக்கழக சமூக உறுப்பினர்களின் உணர்வுகளை எந்த மாணவரும் பாதிக்கக் கூடாது. மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமது பண்பாட்டு நடைமுறைகளுக்கு ஏற்ப உடுப்பதற்கும் உண்பதற்கும் உரிமை உடையவர்கள் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். ஆகையால், தமது சொந்த விருப்புக்கு ஏற்ற வகையில் ஒருவரை உண்ணவோ அல்லது உடுக்கவோ யாரும் வற்புறுத்தக் கூடாது.மாணவர்கள் தமது சொல்லிலும் செயலிலும் மரியாதை காட்டவேண்டும்.எல்லோரும் நல்லிணக்கத்துடன் வாழ வழிவிட வேண்டும். குற்ற நடவடிக்கைகள் பொதுசன தொந்தரவு சட்டகத்தின் கீழ் வரும் சட்டங்களாலும், பல்கலைக்கழக ஒழுக்காற்று விதிகளினாலும் கையாளப்பட வேண்டியவை.

**ஒழுக்காறு, சட்டம், ஒழுங்கு என்பவற்றைப் பேணுதல்:** பல்கலைக்கழகங்கள் எதிர்காலத் தலைவர்களைப் பயிற்றி வளர்க்கும் மதிப்புயர் மையங்களாகும். ஆகவே, அங்கு வாழும் அனைவரும் சிவில் சமூகத்தின் சகல நியமங்களையும் நடைமுறைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் பொறுப்புணர்வோடும் கௌரவத்துடனும் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அத்தோடு, பல்கலைக்கழகத்தால் இயற்றப்பட்ட விதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அவர்கள் இணங்கி நடக்க வேண்டும்.




பல்கலைக்கழக மாணவர்கள் சகலரும் மிக உயர்வான நன்னடத்தை மற்றும் ஒழுக்க நியமங்களைக் பின்பற்ற வேண்டும். அவர்கள் பல்கலைக் கழகத்தின் நற்பெயரைப் பாதுகாக்க வேண்டும் என்று எதிபார்க்கப்படுகிறார்கள். அத்தோடு, பல்கலைக்கழகத்துக்கு அகௌரவத்தையும் அதேவேளை தமது எதிர்காலத்துக்கு மீட்கமுடியாத சேதத்தையும் ஏற்படுத்தக் கூடிய ஒழுக்கக் கேடான, சட்டத்தக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் அவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக சட்ட ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படாமல், நாட்டினதும் பல்கலைக் கழகத்தினதும் சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கும் வகையில் அழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவது பல்கலைக்கழகக் கவுன்சிலினால் அனுமதிக்கப்பட்ட மாணவ துணைச் சட்டங்களால் எடுத்தரைக்கப்பட்டவாறு பல்கலைக்கழக மட்டத்தில் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படும். நாட்டின் சட்டத்தின் அடிப்படையில் குற்றம் இழைத்தவர்கள்மீது சிவில் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பதற்காக அவர்கள் பல்கலைக்கழக அதிகாரிகளினால் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படவும் கூடும். மாணவர்கள் சம்பந்தப்படாது தங்களைக் காத்துக்கொள்ள வேண்டிய முறைகேடான, சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளும் அவற்றில் சம்பந்தப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அவர்கள் எதிர்கொள்ளவேண்டிய பின்விளைவுகளும் கீழே தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி IV

**பல்கலைக்கழகங்களில் தடைசெய்யப்பட்டுள்ள முறைகேடான, சட்டத்துக்கு முரணானநடவடிக்கைகள்**

இலக்கியத் திருட்டும் ஏமாற்றும்

முறைகேடான நடத்தை, முரண்பாடு, எதிர்ப்புகள்

அவமதிப்பும் அடங்காமையும்

பொருட்கள்,சேவைகள், தகவல்களைத் தவறாகப் பயன்படுத்தல்

அனுமதியற்ற நிதி சேகரிப்பு

வெளியார் வருகை

பல்கலைக்கழகத்தினுள் மதுபானம், போதைப்பொருள் புகையிலை என்பவற்றை வைத்திருத்தலும் நுகர்தலும்

சூதாட்டம்

துன்புறுத்துதல் அல்லது வன்முறை

பகடிவதை

பாலியல் துன்புறுத்தல் அல்லது பாலியல் துர்நடத்தை

திருட்டு

சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல்

அனுமதியற்று உட்பிரவேசித்தல்

இலக்கியத் திருட்டும் ஏமாற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகங்களில் தடை செய்யப்பட்ட முறைகேடான, சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகள்

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பயிலும் மாணவர்கள் பின்வரும் முறைகேடானதும் சட்டத்துக்கு முரணானதுமான நடவடிக்கைகளில் ஈடுபடாது விலகி இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு ஈடுபடுமிடத்து பல்கலைக்கழகங்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களின் சட்ட நடவடிக்கைகளுக்கும் ஆளாக வேண்டிவரும்.

1998ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகடிவதை, வேறு வன்முறைகள் தடைச் சட்டம் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்கியுள்ளது. பல்கலைக் கழகங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் பகடிவதையைத் தடுப்பதற்கான உறுதியான வழிமுறைகளைத் தரும் 2010 ஜனவரி 15ஆம் திகதிய 919ஆம் இலக்க யுஜிசி சுற்றுநிருபம் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு முறைகேடான, சட்டத்துக்கு முரணான குற்றச் செயலைப் புரியும் ஒருவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குரிய அதிகாரத்தைப் பல்கலைக்கழக நிருவாகத்துக்கு வழங்கியுள்ளது. மேலும், 2008 டிசம்பர் 1ஆம் திகதிய 902ஆம் இலக்க யுஜிசி சுற்றுநிருபத்தின்மூலம் பல்கலைக்கழகச் சொத்துகளுக்கு விளைவிக்கப்படும் எந்த ஒரு சேதத்துக்கும் சேதம் விளைவித்தவர்களையே பொறுப்பேற்கச் செய்யவும், சேதத்துக்குரிய தொகையை சேதம் விளைவித்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கும் அல்லது மாணவர் சங்கங்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகளிலிருந்து குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு சகல பல்கலைக்கழகங்களுக்கும் யுஜிசி அறிவுறுத்தியுள்ளது.

ஆகவே, பல்கலைக்கழகத்தால் விதிக்கப்படும் தண்டனை நஷ்டத்தை அறவிடுவது அல்லது எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை அளிப்பது அல்லது இவை இரண்டையும் செய்வது முதல் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு கல்விச் செயற்பாட்டிலிருந்து அல்லது பல்கலைக்கழக விடுதி வசதிகளிலிருந்து அல்லது இவை இரண்டிலிருந்தும் தற்காலிக இடைநிறுத்தம் செய்தல் அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றுதல்வரை இருக்கலாம். நீதிமன்றம் விதிக்கும் தண்டனைக்கு மேலாக இவை அமையும்.

**1. இலக்கியத் திருட்டும் ஏமாற்றுதலும்:** பல்கலைக்கழக மாணவர்கள் உயர்ந்த புலமைத் தரத்தைப் பேணுமாறும் தமது கல்வியிலும் பரீட்சையிலும் புலமைத்துவ நேர்மையைக் கடைப்பிடிக்குமாறும் வேண்டப்படுகின்றனர். பரீட்சைகளில் பார்த்தெழுதுதல், பிறருடைய எழுத்தைத் திருடுதல், அல்லது அனுமதிக்கப்படாத ஆவணங்களை




வைத்திருத்தல், மாணவர் அறிக்கைகள் அல்லது ஒப்படைகள் அல்லது ஆய்வேடுகள் என்பவற்றில் தகவல்கள் எங்கிருந்து பெறப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடாமல் பார்த்தெழுதுதல் அல்லது பிறருடைய ஆக்கங்களிலிருந்து பெயர்த்தெழுதுதல் என்பன அனுமதிக்கப்படமாட்டா. இத்தகைய எல்லா மீறல்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சமர்ப்பிக்கப்படும் எந்த ஒரு ஆக்கமும் ஒருவருடைய சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துமாறும், பிறருடைய ஆக்கத்தைப் பயன்படுத்தும்போது அதுபற்றிப் பொருத்தமான வகையில் குறிப்பிட வேண்டும் என்றும் சகல மாணவர்களுக்கும் ஆலோசனை கூறப்படுகின்றது.

2. **முறைகேடான நடத்தை, முரண்பாடு மற்றும் எதிர்ப்பு:** சமகாலச் சமூக ஒழுக்க நியமங்களை அல்லது பல்கலைக்கழக நியமங்களை அல்லது இவை இரண்டையும் மீறும் மாணவரின் நடத்தை சகித்துக்கொள்ளப்படமாட்டாது. பல்கலைக்கழக வளாகத்தினுள் அல்லது பல்கலைக்கழகத்தால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளில் அநாகரிகமாக அல்லது ஆபாசமாக அல்லது மூர்க்கத்தனமாக நடந்துகொள்வதும் சகித்துக்கொள்ளப்படமாட்டாது. சிவில் சட்டங்கள் அல்லது பல்கலைக்கழக விதிமுறைகளுக்கு எதிரான நிகழ்ச்சிகளை அல்லது செயற்பாடுகளை ஏற்பாடுசெய்வது, ஆதரவு வழங்குவது அல்லது நிகழ்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளதோடு அவை ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உரியதுமாகும்.

3. **அவமதிப்பும் அடங்காமையும்:** பல்கலைக்கழக அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்கையில் விடுக்கும் அறிவுறுத்தல்களுக்கு அடங்காமை தடைசெய்யப் பட்டுள்ளது. கீழே தரப்படுவனவும் அவைபோன்றனவுமான சந்தர்ப்பங்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

i. மோசமான அல்லது அவமதிக்கும் மொழியைப் பயன்படுத்துதல்.

ii. அநாகரிகமான, அவமதிக்கும் சைகைகளில் ஈடுபடுதல்.

iii. திசைமாற்றும் அல்லது பிழையான தகல்களை பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு வழங்குதல்.

iv. பல்கலைக்கழக அதிகாரி ஒருவரின் நியாயமான கோரிக்கைக்கு இணங்க மறுத்தல் அல்லது அதை அவமதித்தல்.

v. குறிக்கப்பட்ட தேதியில் சமுமளிக்காமை உட்பட ஒரு குறிப்பிட்ட கால எல்லையுள் ஒரு நியாயமான கோரிக்கைக்கு எதிர்வினை ஆற்றாமை.

vi. உள்நோக்குடனும் அறிந்துகொண்டும் கற்பித்தலில் தலையிடுதல்.

vii. ஒரு சம்பவம் பற்றிய விசாரணையைத் தடுத்தல் அல்லது குழப்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. பொருட்கள், சேவைகள், தகவல்களைத் தவறாகப் பயன்படுத்துதல்:** பல்கலைக் கழகத்துடனும் பொதுமக்களுடனும் தாங்கள் தொடர்பு கொள்ளும்போது உண்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர். மாணவர்களதும் அவர்களது விருந்தினரதும் பின்வரும் நடத்தைகள் தடைசெய்யப்பட்டுள்ளன:

i. ஒருவர் அல்லது ஒரு குழுவினரின் அனுமதியைப் பெறாது அவர்களது ஏதாவது ஒரு உடைமையை வைத்திருத்தல் அல்லது அனுமதி பெறாது ஏதாவது ஒரு சேவையை வழங்குதல்.

ii. ஏமாற்றுதல் மூலம் பணம், பொருள் அல்லது சேவைகளைத் திருடுதல், கையாடுதல் அல்லது மோசடிசெய்தல்.

iii. திருடப்பட்டவை அல்லது மோசடிமூலம் பெறப்பட்டவை என்று தெரிந்துகொண்டே அத்தகைய பொருட்களை, பணத்தை அல்லது சேவைகளை வைத்திருத்தல், வாங்குதல் அல்லது பெறுதல்

iv. பல்கலைக்கழக வளாகத்துள் கொடுக்க வேண்டிய பணத்துக்காக அல்லது வேறு தேவைகளுக்காக வழங்கப்படும் காசோலையை, வங்கியில் கொடுக்கும்போது அதற்குப் பணம் வழங்கப்படமாட்டாது என்று தெரிந்துகொண்டே வழங்குவது

v. உரிய வகையில் அனுமதி பெறாது திறப்புகள், கணினிக் குறிகள் அல்லது வேறு பொறிமுறைகளைப் பிரதிசெய்தல்

vi. ஒரு நிருவாகப் பதிவேட்டில் ஏதாவது ஒரு பிழையான தகவலை சேர்க்குமாறு செய்தல், திருத்துதல் அல்லது மோசடிசெய்தல் அல்லது நிருவாக, ஒழுக்காற்று நடவடிக்கை நிகழ்வுகளில் அத்தகைய தகவல்களை முன்வைத்தல்

vii. கணினி முறைமை, கணினிச் சேவையைப் பெறும் குறிகள் அல்லது கணினி சேவைக்கென வரையறுக்கப்பட்ட இடங்கள் ஆகியவற்றை அனுமதியற்றுப் பயன்படுத்துதல்

viii. பிழையான அடையாளத்தை வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல்.

ix. பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டவர் தவிர்ந்த வேறு யாரும் அலுவலகங்கள் அல்லது துறைகளுக்குரிய ஆய்வுகூடங்கள் அல்லது பீடக் கட்டிடங்கள், விடுதி அறைகள் ஆகியவற்றுள் செல்லக்கூடிய திறப்புகளை அல்லது வேறு பொறிமுறைகளை(எண்குறிகள், ஸ்வீப் அட்டைகள் முதலியவை) வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. அனுமதியற்ற நிதி சேகரிப்பு:** ஒரு பல்கலைக்கழகத் தேவைக்காக மாணவர்களால் அல்லது நிருவாகத்தால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நிதிசேகரிப்பும் உரிய முறையில் துணைவேந்தரின் அனுமதிபெற்றே மேற்கொள்ளப்பட வேண்டும். வெளி நிறுவனங்களிடம் நிதிஉதவி கேட்கும் எந்த ஒரு கோரிக்கையும் துணைவேந்தரின் அனுமதியுடனும் அவரது கையொப்பத்துடனும் அந்த நிறுவனத்துக்கு விலாசமிட்ட கடிதமூலமே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய அனுமதியில்லாது அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது தரும அல்லது சமூக நடவடிக்கைகளுக்காகவோ பல்கலைக்கழகத்துக்கு உள்ளோ அல்லது வெளியிலோ நிதிசேகரிப்பு முயற்சியில் ஈடுபடுவது அனுமதிக்கப் படவில்லை.

**6. வெளியார் வருகை:** துணைவேந்தரின் அனுமதி இல்லாது பல்கலைக்கழகம் சாராத வெளியார், நிறுவனம், வர்த்தகம் எவையும் பல்கலைக்கழக வளாகத்துள் வருவது அனுமதிக்கப்படமாட்டா. கூட்டங்கள் வைத்தல், எவ்வகையான துண்டுப்பிரசுங்களும் வினியோகித்தல், பொருட்கள் அல்லது சேவைகளைப் பரிவர்த்தனை, பண்டமாற்று அல்லது விற்பனை செய்தல் என்பனவற்றையும் இது உள்ளடக்கும்.

**7. பல்கலைக்கழகத்தினுள் மதுபானம், போதைப்பொருள், புகையிலை என்பவற்றை வைத்திருத்லும் நுகர்தலும்:** இலங்கையர் சமூகம் மதுபானம், போதைப் பொருள்,புகையிலை முதலியவற்றின் நுகர்வை ஆதரிப்பதில்லை. இத்தகைய பொருட்களின் பாவனை மனித மனதுக்குப் போதையூட்டுவதும், மனித நடத்தையைப் பிறழ்விப்பதும், அதன்காரணமாக அவர்களின் உடல், உள ஆற்றலைச் சீர்குலைப்பதும் இதற்குக் காரணமாகும். அதனால், பல்கலைக்கழக வளாகத்தினுள் மதுபானம், போதைப்பொருள், புகையிலை என்பவற்றை வைத்திருப்பதையும் பயன்படுத்துவதையும் தடைசெய்யும் நடைமுறையை அரச பல்கலைக்கழகங்கள் கடைப்பிடிக்கின்றன. ஆகவே, பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் பல்கலைக்கழகத்தின் எந்த ஒரு இடத்தினுள்ளும் மதுபானத்தைக் கொண்டுவரவேண்டாம் என மாணவர்களுக்கு உறுதியாக ஆலோசனை கூறப்படுகின்றது. மதுபானம் அல்லது போதைப்பொருள் அல்லது அவை இரண்டையும் அருந்திய நிலையில் பல்கலைக்கழகப் பிரதேசத்தினுள் பிரவேசிக்க வேண்டாம் என மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**8. சூதாட்டம்:** பல்கலைக்கழக வளாகத்தினுள் சூதாட்டம் அனுமதிக்கப்படுவதில்லை. பந்தயம் பிடித்தல், பந்தயத்தை ஏற்றல், எவ்வகையான பந்தயத் திட்டங்களையும் நடத்துதல், பணங் கொடுத்தல் என்பன அனுமதிக்கப்படமாட்டாது. சூதாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் அல்லது மாணவர்கள நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் பல்கலைக்கழக விதிமுறைகளுக்கேற்ப தண்டிக்கப் படுவார்கள்.

**9. துன்புறுத்துதல் அல்லது வன்முறை:** பல்கலைக்கழகத்தக்கு உள்ளோ வெளியிலோ தனி நபர்களையோ அல்லது தனிநபர் குழுக்களையோ துன்புறுத்துவது அல்லது வன்முறைக்குத் தூண்டுவது சிவில் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். துன்புறுத்துதல், வன்முறை தொடர்பான சிவில் சட்டம் பல்கலைக்கழகத்தின் உள்ளும் வெளியிலும் ஒரே அளவில் செல்லுபடியாகும். பல்கலைக்கழகப் பீட உறுப்பினர்கள், நிருவாக ஊழியர்கள், மாணவ அமைப்புகள் அல்லது விருந்தினர்கள் ஆகியோருக்கு எதிராக நேர்முகமாகவோ மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படும் பின்வரும் நடவடிக்கைகளும் இவை போன்றனவும் இதில் அடங்கும்.

i. ஒரு தனிநபரை அல்லது ஒரு குழுவினரை அச்சுறுத்துதல் அல்லது அவர்கள்மீது உடற்பலத்தைப் பிரயோகித்தல் அல்லது இரண்டையும் செய்தல்.

ii. தனிநபர்கள் அல்லது குழுவினருக்கு உடற்காயங்களை அல்லது உளவியல் தாக்கத்தை அல்லது இரண்டையும் ஏற்படுத்தும் வகையில் வன்முறையில் அல்லது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுதலும் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தலும்.

iii. தனிநபர்கள் அல்லது குழுவினருக்கு அழுத்தம் கொடுத்தல், நெருக்கடி கொடுத்தல், துன்புறுத்துதல்.

iv. பிறரைத் தொந்தரவு செய்தல் அல்லது சினமூட்டுதல்.

v. தொலைபேசி, கடிதம், மின்னஞ்சல் அல்லது வேறு வகையான தொடர்பாடல் முறைகள் மூலம் துன்புறுத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்ட அல்லது வேறுவகையான துன்புறுத்தல்கள் வன்முறைகள் பற்றிய முறைப்பாடுகள் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிசாருக்குப் பாரப்படுத்தப்படுவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவிடம் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காகவும் ஒப்படைக்கப்படலாம்.




**10. பகடிவதை:** பல்கலைக்கழகங்கள் சுயாதீனமான உன்னத புலமைத் தேடலுக்கான சுவர்க்க பூமிகளாகும். புகடிவதை அல்லது துன்புறுத்தல் மாணவர்களின் சுதந்திரத்தை அல்லது சுயாதீனத்தைக் குறைத்து பலவீனப் படுத்தியுள்ளதோடு புலமைத் தேடலில் உன்னதத்தை அடைவதையும் அது தடுக்கின்றது. 1998ல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பகடிவதைக்கு எதிரான சட்டத்தின்கீழ் இப்போது பகடிவதை தண்டனைக்குரிய ஒரு கிறிமினல் குற்றமாகும். துரதிஷ்டவசமாக பல தேசிய பல்கலைக்கழகங்களில் துன்புறுத்தல் அல்லது பகடிவதை நடைபெறுகின்றது. தாழ்வு மனப்பான்மையினாலும், மனப் பிறழ்வினாலும் பாதிக்கப்பட்ட தனிநபர்களினாலும், அழிவுகரமான அரசியல் இயக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்களாலும் இந்த அடக்குமுறை நிகழ்கின்றது. உண்மையில் பகிடிவதை புரிவோர் சில அரசியல் செயற்பாட்டாளர்களால் கையாளப்படும் கைப்பாவைகளே. துன்புறுத்தல் அல்லது பகடிவதை என்பது (ஒரு தனிநபர் அல்லது குழுவினரால்) வளாகத்துக்குள்ளோ வெளியிலோ பிறிதொருவரை தூசஷிக்கும், மோசமாக நடத்தும், தரம்குறைக்கும், துன்புறுத்தும், நாணவைக்கும் அழுத்தம் கொடுக்கும் உடல்ரீதியான, உள அல்லது உணர்வுரீதியான எந்த ஒரு செயலையும் குறிக்கும். பின்வருவனவற்றையும் இவைபோல்வனவற்றையும் உள்ளடக்கும் இத்தகைய செயல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன:


i. அர்த்தமற்ற அல்லது நாணத்தக்க செயல்களைப் புரியுமாறு ஒருவரை வற்புறுத்துதல்.
ii. தனிநபர்களை அல்லது குழுவினரை அவர்கள் விரும்பாததைச் செய்யும்படி நெருக்குதல், வற்புறுத்துதல், அழுத்தம்கொடுத்தல்.
iii. உடல்ரீதியாக அல்லது உளரீதியாக அதிக சோர்வை ஏற்படுத்தல்.
iv. உடல் அல்லது உள அதிர்ச்சியை ஏற்படுத்துதல்.
v. விரும்பாத ஆடைகளை அணியுமாறு வற்புறுத்ததல்.
vi. ஒழுக்கக்கேடான அல்லது வெட்கப்படுத்தகிற செயல்கள், விளையாட்டுகள் அல்லது நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஒருவரை அல்லது பலரை வற்புறுத்துதல்.
vii. தனிநபர்களை அல்லது குழுவினரை சிவில் சமூகத்தின் நியமங்களுக்குப் புறம்பான, கல்விச் செயற்பாட்டில் குறுக்கீடு செய்யக்கூடிய அதிகாலை அல்லது பின்மாலை வேலை அமர்வுகளில் ஈடுபட வற்புறுத்ததல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

viii. பல்கலைக்கழகத்தின் கொள்கைக்குப் புறம்பான, பல்கலைக் கழகத்தின் பணியை மோசமாகப் பாதிக்கக்கூடிய, அதன் படிமத்தை ஊறுபடுத்துகின்ற உடல்குறியிடுதல் அல்லது மைபூசுதல் அல்லது வேறு செயற்பாடுகள்.

மேலே குறிப்பிட்டவகையான முறைப்பாடு செய்யப்பட்ட எல்லா நிகழ்வுகளும் 1998ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பகடிவதைக்கு எதிரான சட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக பொலிசாருக்குப் பாரம்கொடுக்கப்படும். அதேவேளை, பல்கலைக்கழகமும் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும். இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதை இலகுவாக்கும் வகையில் பல வழிகாட்டல் ஆவணங்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிட்டுள்ளது. அத்தோடு இத்தகைய துன்புறுத்தல், பகடிவதை நிகழ்வுகள் எவையும் நடைபெறாமல் தடுப்பதற்குரிய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழகங்களைக் கேட்டுள்ளது.




**11. பாலியல் துன்புறுத்தல் /பாலியல் துர்நடத்தை:** பல்கலைக்கழகக் குடித்தொகை பொதுவாக ஆண், பெண் இருபாலினரையும் சம அளவில் கொண்டுள்ளது. தார்மீக, ஒழுக்க அடிப்படையிலன்றி பாலியல் நடத்தையில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் நடைமுறையில் வரையறுக்கப்படமுடியாதது. சகல தார்மீக, ஒழுக்க, மத விழுமியங்களும் மனிதர்கள் மத்தியில் வேரூன்றியிருப்பினும், பிறர்மீது தம் விருப்பத்தைத் திணித்து பாலியல் துன்புறுதத்லுக்கும் துர்நடத்தைக்கும் காரணமாகும் மனிதர் இன்னும் இருக்கின்றனர். பல்கலைக்கழக நிருவாகத்துள்வரும் யாரேனும் ஒருவர் தமது பாலியல் விருப்பத்தைப் பிறிதொருவர்மீது திணிக்க முயல்வதன் மூலம் பாலியல் துன்புறுத்தலிலும் துர்நடத்தையிலும் ஈடுபடுவாரானால் அவர் எதிர்ப்பாலினம் அல்லது ஒரே பலினத்தவராயினும் அதுபற்றி ஒரு முறைப்பாடு கிடைக்குமாயின் நடைமுறையிலிருக்கும் சட்டத்தின் அடிப்படையில் நீதியை நிலைநாட்டுவதற்கும் குற்றவாளியைத் தண்டிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. **திருட்டு:** பௌதீகப் பொருட்களைக் களவாடுதல் அதேபோல் பருப்பொருள் சாராத ஆய்வறிவுச் சொத்துகள் (பிறரின் புலமைத்துறை, ஆராய்ச்சி வேலைகள், கண்டுபிடிப்புகள்) போன்றவற்றைத் திருடுதல் என்பன சிவில் சட்டத்தின்கீழும், பல்கலைக்கழக ஒழுக்காற்று நடைமுறைகளின்கீழும் தண்டனைக்குரிய குற்றங்களாகும். அத்தகைய செயல்கள் சம்பந்தப்பட்டவருக்கு மிகப் பாதிப்பாக அமைவதோடு அவரது முழுத் தொழிற் கலத்தையும் வாழ்க்கை முழுவதையும் பாதிப்பதாக அமையும். அவ்வகையில் தாம் எடுத்தாளும் ஆய்வறிவுச் சொத்துக்களின் மூலங்களைக் குறிப்பிடும் போது நேர்மையையும் வெளிப்படைத் தன்மையையும் பேணுமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

13. **சொத்துக்களைச் சேதப்படுத்துதல்:** பல்கலைக்கழகத்தில் சொத்துக்களைச் சேதப்படுத்துதல் அல்லது பிறரை அவ்வாறு செய்யத் தூண்டுதல் என்பன பொதுச் சொத்துக்கள் தனியார் உடைமைகள் தொடர்பான சட்டத்தின்படியும் பல்கலைக்கழக ஒழுக்காற்று நடைமுறைகளின் படியும் கையாளப்படும். இத்தகைய நடவடிக்கைகளால் வகுப்பறைத் தளபாடங்கள், விடுதித் தளபாடங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கணினிகள் அவற்றின் பாகங்கள், விளையாட்டு மைதான உபகரணங்கள் போன்றவற்றுக்கு ஏற்படும் சேதம் குற்றவாளிகளாகக் காணப்படும் மாணவர்களிடமிருந்து அறவிடப்படும். மாணவர் போராட்டம் இந்த அழிவுகளுக்குக் காரணமாக இருந்தால், உபகரணங்களுக்குரிய பெறுமதியும் தண்டமும் போராட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த அமைப்பாளரிடம் இருந்து அறவிடப்படும். தனித்த செயற்பாடுகளால் ஏற்பட்டதாய் இருந்தால் அந்தச் சொத்தைப் பயன்படுத்துவதற்கு உத்தியோக பூர்வமாக அனுமதியளிக்கப்பட்ட மாணவர் அதற்குப் பொறுப்பேற்க வெண்டும் என்பதோடு சேதத்தக்குரிய நட்ட ஈட்டையும் அவரே செலுத்த வேண்டும்.

14. **அனுமதியற்று உட்பிரவேசித்தல்:** பல்கலைக்கழகங்கள் தமது சொத்துக்களைப் பயன்படுத்த உரித்துடையவர்கள் தொடர்பாக கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. பொதுவாக சகல மாணவர்களும் வேலைநேரத்தில் வகுப்பறைகள், நூலகங்கள், விளையாட்டுமைதானங்கள்,உடற்பயிற்சிக் கூடங்கள் போன்றவற்றைப் வரையறையற்றுப் பயன்படுத்த முடியும். மாணவர்கள் தமது விடுதிகளுக்கு எப்போதும் போய்வரலாம், ஆனால், விடுதி வார்டனின் அனுமதியின்றி விருந்தினர்கள் அவ்வாறு செய்ய முடியாது. இதுபோல், பாதுகாப்பு விடயங்கள் உட்பட பல்வேறு காரணங்களால் பொது இடங்களைப் பயன்படுத்தவதற்கு தடைவிதிக்கப்படலாம். மற்றைப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமக்குச் சொந்தமில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒரு பல்கலைக்கழகத்தைப் போய்ப் பார்க்க விரும்பினால் இரண்டு பல்கலைக்கழக நிருவாகத்திடமிருந்தும் அனுமதி பெற வேண்டும். இதை மீறிப் பிரவேசிக்கும் யாரும் நாட்டின் பொதுச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட முடியும். அத்தோடு பல்கலைக்கழக ஒழுக்காற்று முறைமைகளுக்கு ஏற்பவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**15. நிருவாக அதிகாரிகளுடனும் விசாரணைக் குழுக்களுடனும் ஒத்துழைத்தல்:** ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழகங்கள் பல்வேறு குழுக்களை நியமிக்கின்றன. வாய்மூல அல்லது எழுத்துமூல விளக்கங்களை அளிப்பதற்கு மாணவர்களுக்கு அழைப்புவிடும் அதிகாரத்தையும் அவை அதிகாரிகளுக்கு வழங்குகின்றன. அத்தகைய சம்பவங்களின்போது மாணவர்கள் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும். அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவோ அல்லது பணிவின்மை காரணமாகவோ மாணவர்கள் ஒத்துழைக்கத் தவறினால் அது பல்கலைக் கழக நிருவாகத்தை உதாசீனம் செய்வதாக அமைவதோடு பிறிதொரு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கும் காரணமாகலாம். தகவலுக்கான கோரிக்கை விடப்படும் போதெல்லாம் நிருவாக அதிகாரிகளுடன் ஒத்துழைக்குமாறு மாணவர்களுக்கு உறுதியாக ஆலோசனை கூறப்படுகின்றது.

**16. மேல்முறையீட்டுக்கான உரிமை:** மேல்முறையீட்டுக்கான உரிமை அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக உயர்நீதிமன்ற நிலைவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது பல்கலைக்கழகங்களுக்கும் ஏற்புடையது. ஆகையால், ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக ஒழுக்காற்று அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக ஒருவர் துணைவேந்தருக்கு மேல்முறையீடு செய்யலாம். இது கூட்டாகவோ அல்லது தனியாகவோ செய்யப்படலாம். இத்தகைய மேல்முறையீடுகளுக்கு பொருத்தமான வழிமுறைகள் மூலம் துணைவேந்தர் நீதியான விசாரணைக்கு ஏற்பாடுசெய்வார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய பல்கலைக்கழகங்கள் அதன் மாணவர்களுக்கு வழங்க வேண்டியவையாக எதிர்பார்க்கப்படுபவை எவை?

அரச பல்கலைக்கழகங்கள் மாணவர்களையும் கல்விசார், கல்விசாரா ஊழியர்களையும் கொண்ட ஒரு சமூகமாகும். அதற்கென்று உரிமைகளும் கடமைகளும் கடப்பாடுகளும் உண்டு. பல்கலைக்கழகங்கள் கற்றல், கற்பித்தல், சமூகத்துக்குச் சேவைசெய்தல், ஆராய்ச்சி ஆகிய தமது அடிப்படைப் பணிகளைத் தொடர்வதற்கும் மேம்படுத்துவதற்கும் வேண்டிய ஆற்றலைத் தீர்மானிக்க உதவுபவை இவை.

- பல்கலைக்கழகங்கள் தம் மாணவர்கள் அனைவரும் பட்டப்படிப்புக் காலத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்ய வேண்டும் என விரும்புகின்றன. பல்கலைக்கழகம் தன் மாணவர் அனைவரின் பாதுகாவலராகச் செயற்படும். தன் மாணவர்களுடன் உள்ள தொடர்பைப் பொறுத்தவரை உடன் செயற்படுவதாகவும், தாக்கமுடையதாகவும் ஆதரவுடனும் நடந்துகொள்ளும். கல்வித்தரத்தைப் பேணுவதிலும் மாணவர்களின் தார்மீக, ஒழுக்க நடத்தையை உறுதிப்படுத்துவதிலும் இனத்துவ, சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துவதிலும் அது அதிகாரபூர்வமாக நடந்துகொள்ளும்.

- கற்கை நெறிகளின் பருமட்டான குறிக்கோள்கள், வழங்கப்படும் பாடநெறிகள் / மொடியூல்கள்/ அலகுகள் தொடர்பான தெரிவுகள், நோக்கங்கள், எதிர்பார்க்கப்படும் கற்றல் திறன்கள், உள்ளடக்கம், மதிப்பீட்டு முறைகள், அளவுகோல்கள் போன்ற தகவல்களை எழுத்து வடிவிலோ அல்லது இணைய வடிவிலோ அல்லது இரு வகைகளிலுமோ அரச பல்கலைக்கழகங்கள் உரிய காலத்தில் வழங்கும்.

- அரச பல்கலைக்கழகங்கள் கற்பித்தல் மற்றும் பயிற்சி வழங்குதல் இரண்டும் இணைந்த முறையினூடாக அடிப்படையான அறிவையும் திறன்களையும் வழங்கும். அதாவது, வகுப்பறை விரிவுரைகள், ஆய்வுகூட மற்றும் களப் பயிற்சி அமர்வுகள், இணைய மற்றும் கணினி அடிப்படையிலான கற்பித்தல், பயிற்சி வகுப்புகள், மாணவர் ஒப்படைகள் மற்றும் ஆய்வுத் திட்டங்கள் என்பனவற்றை இது உள்ளடக்கும்.

- எல்லா நூலக வசதிகளும், மாணவர்கள் முழுமையான ஆளுமை உடையர்களாக ஆவதற்கு உதவும் மொழிகற்பித்தல், கணினிசேவைகள், மென்திறன்கள் அல்லது பரிமாற்றல் திறன்களைப் பெறும் வாய்ப்புகள் உட்பட தொழில் வழிகாட்டல் சேவைகள் அனைத்தும் சகல மாணவர்களுக்கும் கிடைப்பதை பல்கலைக்கழகங்கள் உறுதிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விடுதிவசதி, உடல்நலம், பொழுதுபோக்கு வசதிகள், சமூக, பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான வசதிகள், கல்வி தொடர்பான ஆலோசனை சேவைகள், கற்றலுக்கான மற்றும் நிதிநெருக்கடி தொடர்பான, அதுபோல் பாதுகாப்பு தொடர்பான உதவிகள் போன்றவை உட்பட ஒரு பரந்துபட்ட மாணவர் உதவிச் சேவைகளை எல்லா மாணவர்களும் பெறுவதை பல்கலைக்கழகங்கள் உறுதிப்படுத்தும்.

- பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க சகல மாணவர்களும் நடந்துகொள்வதையும் சட்டத்துக்குக் கட்டுப்பட்ட, குடியியல் பிரக்ஞை உடைய குடிமக்களால் எதிர்பார்க்கப்படும் நியமங்களுக்கு அமைவாக நடந்துகொள்வதையும் பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தும்.

- பல்கலைக்கழகத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நல்லொழுக்கக் கோவைக்குக் கட்டுப்படத் தவறும் குற்றமிழைக்கும் சகலரையும் நீதியானதும் திறனுடையதுமான விசாரணைக்கு உட்படுத்துவதையும் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்குத் தண்டனை வழங்குவதையும் பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தும். இத்தண்டனை, எச்சரிக்கை வழங்குதல் முதல் வழங்கப்பட்ட விடுதிவசதிகளை மீளப்பெறுதல், மாணவர் அந்தஸ்தைத் தற்காலிகமாக நிறுத்துதல் அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து நீக்குதல் வரை பலவகைப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய பல்கலைக்கழகங்கள் மாணவர்களிடம் மீள எதிர்பார்ப்பவை எவை?

பல்கலைக்கழகம் மாணவர்களுக்குச் செய்யக் கடமைப்பட்டுள்ளவை பற்றி மாணவர் சாசனம் எடுத்துரைக்கின்றது. அதுபோல் மாணவர்களிடம் இருந்து பல்கலைக்கழகம் எதை எதிர்பார்க்கின்றது என்பதையும் அது கூறுகின்றது. பல்கலைக்கழகமும் பெற்றோரும் பாதுகாவலரும் பொதுமக்களும் அதே அளவு கடப்பாட்டை மாணவர்களிடமும் எதிர்பார்க்கின்றனர். மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் விதிமுறைகளுக்கு இணங்கி நடக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். மிகுந்த குடியியல் பிரக்ஞை உடையவர்களாகவும், ஏனைய குடிமக்களால் பின்பற்றத்தக்கவர்களாகவும் விரும்பத்தக்க சமூக மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய முகவர்களாகவும் வாழத்தக்க வகையில் மாணவர்கள் தங்களை முன்மாதிரிக் குடிமக்களாக வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

ஒரு மாணவர் என்ற வகையில் நீங்கள்:

- பல்கலைக்கழகத்தின் விதிமுறைகள் பற்றி அறிந்தவர்களாகவும் அதற்கு இணங்கி நடப்பவர்களாகவும், உங்கள் உரிமைகள் கடமைகள் தொடர்பான எல்லா நடைமுறைகளையும் அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

- கல்வி தொடர்பான, தனிப்பட்ட நடத்தை தொடர்பான பல்கலைக்கழக விதிகள் அனைத்துக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அத்துடன், குடியியற் சமூகத்தின் நியமங்களுக்கு இணங்க சகமாணவர்களுடனும் ஆசிரிய குழாத்துடனும் ஊடாடுவதையும் இணங்கி நடப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

- வளாகத்திலும் பல்கலைக்கழக விடுதியிலும் சமூகத்திலும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து பல்கலைக்கழகத்தின் நற்பெயரை நிலைநாட்ட வேண்டும்.

- பல்கலைக்கழகத்துடனும் ஆசிரியர்களுடனும் சக மாணவர்களுடனும் அயலவருடனும் சமூகத்தின் பிற மனிதர்களுடனும் தொடர்புகொள்ளும்போது அவர்களுடைய இனம், இனத்துவம், வயது, பால்நிலை, குடியியல் அந்தஸ்து, பாலியல் சார்பு, மத நம்பிக்கை, குழுச்சார்பு, உடற்குறைபாடு, அரசியல் நம்பிக்கை, மாணவ அல்லது தொழிற்சங்க அல்லது இரண்டினதும் அங்கத்துவம் என்பவற்றுக்கு அப்பால் மரியாதையுடனும் பணிவுடனும் அக்கறையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல்கலைக்கழகச் சூழலையும் கட்டிடங்களையும் வசதிகளையும் அதிக கவனத்துடனும் மதிப்புடனும் கையாள வேண்டும்.

- அழகியல்ரீதியாக மகிழ்வூட்டும் அமைதியான சூழலை கற்றலுக்கும் அழகியல் பண்பாட்டுத் தேடலுக்கும் சாதகமானதாகப் பேணுவதில் பல்கலைக்கழகத்துக்கு உதவ உறுதிகொள்ள வேண்டும்.

- அயல் கிராமங்களையும் நகரங்களையும் சேர்ந்த மக்களுடன் இணக்கமாக நடந்துகொள்வதுடன் பல்கலைக்கழகத்தக்கு வருவோரை மரியாதையுடன் வரவேற்க வேண்டும். உடல்ரீதியாகவோ உளரீதியாகவோ அவர்களுக்கு ஊறு விளைவிக்காமலும் பல்கலைக்கழகத்தின் நற்பெயரைக் கெடுக்காமலும் இருக்க வேண்டும்.

- கற்கை நெறிகளுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு, பல்கலைக்கழகத்தில் கிடைக்கக்கூடிய எல்லா வளங்களையும் அவை இருக்கும் இடங்களைப் பொருட்படுத்தாமல். அவற்றைப் பயன்படுத்தும் பிறரின் தேவையையும் கருத்தில் கொண்டு பயன்படுத்துவதோடு, அரிய வளங்களை எதிர்காலச் சந்ததியினரின் தேவைக்காகச் சேமித்துவைக்கவும் உதவவேண்டும்.

- நிறைய வாசித்து கற்கை நெறிக்குத் தேவையான சகல தகவல்களையும் அறிந்துவைத்திருப்பதோடு, குறிப்பிடப்பட்ட சகல விரிவுரைகளுக்கும் செயல்முறை வகுப்புகள், கலந்துரையாடல் வகுப்புகள், கருத்தரங்குகள், வேறு கற்பித்தல் அமர்வுகள் எல்லாவற்றுக்கும் சமுகமளிக்க வேண்டும்.

- திட்டமிடப்பட்ட எல்லா பரீட்சைகளுக்கும் தயார்படுத்திக் கொள்வதோடு, அர்த்தமுள்ள அறிவுத் தேட்டத்தையும் சொந்த முன்னேற்றத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சாத்தியமான மிகச் சிறந்த தரத்தைப்பெற கடுமையாக உழைக்கவேண்டும்.

- தேவைப்படுத்தப்பட்ட கல்விச் செயற்பாடுகளை, குறிப்பாக, மதிப்பீட்டுக்குப் பங்களிப்புச் செய்யும் மாணவர் ஒப்படை, ஆய்வுத்திட்டம், அறிக்கைகள் போன்றவற்றை நிறைவு செய்ய வேண்டும்.

- பல்கலைக்கழகத்தில் நடைமுறையில் உள்ள மாணவர் மைய, இணைந்த கற்பித்தலின் மதிப்பை ( அதாவது, நேர்முகக் கற்பித்தல், கணனி மையக் கற்றல் கற்பித்தல் அமர்வுகள், இணையக் கற்றல் விடயங்கள், மதிப்பீடுகள், மாணவர் ஒப்படைகள், ஆய்வுத் திட்டங்கள் முதலியவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து கொள்வதோடு, சுயேச்சையாகக் கற்பவர் என்ற வகையில் அதற்குத் தேவைப்படும் திறனை வளர்த்துக் கொள்வதற்காகப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பொறுப்பேற்க வேண்டும்.

- உங்கள் கற்கை நெறியில் வழங்கப்படும் பாடநெறிகள் மொடியூல்கள் பற்றிய உங்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்கு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பை முழுமையாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்களுக்கும் உங்களை அடுத்து வருவோருக்கும் பயன்படும் வகையில் இவை மேம்படுத்தப்படலாம்.

- கல்வித்துறை ஆலோசனை, மாணவர் ஆலோசனை, தொழில் வழிகாட்டல் சேவை முதலிய மாணவர் உதவிச் சேவைகளின் பயனைப் பெறமுயல்வதோடு, சொந்தப் பிரச்சினைகளுக்கும் கல்விகற்றல் தொடர்பான சிக்கல்களுக்கும் தீர்வு காண்பதற்கு அவசியம் எனக் கருதப்படும் இந்த உதவிச் சேவைகளைப் பெறுவதில் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். அத்தோடு, தொழிற் தேர்வுகளைச் செய்வதற்கு உதவும் வகையில் 'வேலை உலகுக்கு' தேவையான மென்திறன்களைப் பூரணமாகப் பெறுதல் வேண்டும்.

- சுய-அபிவிருத்திக்கும், பல்வேறு இனத்துவ, சமூகப் பின்னணிகளைக் கொண்ட சக மாணவர்களுடன் தொடர்புகொள்ளவும், போட்டிக்கும் பொழுதுபோக்குக்கும் உரிய விளையாட்டுத் திறன்களை மேம்படுத்தவும், பண்பாட்டு, அழகியல் ஆக்கங்களை பூரணமாக நயக்கவும் அவற்றின் பெறுமதியை உணரவும் தேவையான திறன்களையும் ஆற்றலையும் பெறவும் அவற்றை வளர்த்துக்கொள்ளவும் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.

- அச்சம், வற்புறுத்தல், துன்புறுத்தல் என்பன இல்லாத பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலை மேம்படுத்துவதற்கும் பல்கலைக்கழகத்தின் நற்பெயரையும் மதிப்பையும் பாதுகாத்து மேம்படுத்துவதற்கும் தனிப்பட்டமுறையில் பொறுப்பேற்க வேண்டும்.

- ஒரு மாணவர் அல்லது மாணவர் குழுவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவு தீவிரமான மோசமான நடத்தைகள் பற்றியும், மாணவர் ஒழுக்காற்று நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவற்றுக்கான தண்டனைகள் பற்றியும் அறிந்திருப்பதோடு அத்தகைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளைத் தடுப்பதற்கு முன்கூட்டியே வேலைசெய்ய வேண்டும்.

- தனிப்பட்ட முறையில் உங்களுக்கோ அல்லது சக மாணவர்களுக்கோ இழைக்கப்படும் அநீதி, துன்புறுத்தல் அல்லது வற்புறுத்தல் பற்றி அதிகாரிகளுக்கு அறியத்தருவதோடு, தேவைப்படுமிடத்து அதிகாரிகளுக்கு சகல தகவல்களையும் அளித்து விசாரணைக்கு உதவ வேண்டும்.

- உங்கள் சொந்தப் பாதுகாப்புக்கும் உடல் நலத்துக்கும் பொறுப்பேற்பதோடு உங்கள் நண்பர்கள், சக மாணவர்களின் நலன் பற்றிக் கவனமாய் இருக்க வேண்டும். உங்கள் சக மாணவர் ஒருவர் தீவிர நோயுற்றிருந்தால் அல்லது மருத்துவ மனையில் சேர்க்கவேண்டியிருந்தால் உடனடியாக துறை அல்லது பீட அலுவலகத்துக்கு அல்லது மாணவ உதவிச் சேவைகள் பணிப்பாளருக்கும் உங்கள் நிறுவகம் அல்லது பீட மாணவ ஆலோசகருக்கும் அறியத்தர வேண்டும்.

- மாணவர் சங்கங்கள், மன்றங்களை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் ஒரு மாணவர் சங்கத்தின் அல்லது மன்றத்தின் உறுப்பினரானால் முதிர்ச்சியோடும் கவனமாகவும் நடந்துகொள்ள வேண்டும். அரசியல் நோக்கம் கொண்ட இயக்கங்களுக்கு இரையாக வேண்டாம். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தின் தீர்மானம் எடுக்கும் அமைப்புகளிலும், உங்களது நிறுவக அல்லது பள்ளி அல்லது பீட மாணவ-ஆசிரிய குழுவிலும் மாணவ பிரதிநிதியாகச் செயற்படும் போது உங்கள் தலைமைத்துவ ஆற்றல்களையும் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மாணவர் சங்க அல்லது மன்ற உறுப்பினர் என்ற வகையில் உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்போது பொறுப்புணர்வுடைய, முதிர்ச்சிபெற்ற, அறிவுபூர்வமான ஒரு உறுப்பினராக நீங்கள் செயற்பட வேண்டும். ஒரு சங்க அல்லது மன்றத்தின் பிற உறுப்பினர்களுடன் இணைந்து கூட்டுச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்போது கருத்தொருமையையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்ப முயல்வதோடு நடுநிலைத் தன்மையையும் வெளிக்காட்ட வேண்டும். பல்கலைக்கழகத்தின் கௌரவத்தைக் குலைக்கும் வகையில் எதுவும் செய்வதில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
20, வார்ட் இடம், கொழும்பு – 07
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org